கருநாடக அரசு

# செம்மொழித் தமிழ்
# CHEMMOZHI THAMIZH

## முதல் மொழி
## ஏழாம் வகுப்பு

**7**

**பாகம் - 2**

# Tamil First Language

@KTBS
NOT TO BE REPUBLISHED

**KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

# ஏழாம் வகுப்பு - தமிழ் - முதல்மொழி

## பொருளடக்கம்

N7W4I9


| பாட எண் | பாடத்தின் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 12. | கடவுள் வாழ்த்து | 1 |
| 13. | நாட்டு வாழ்த்து [ மனப்பாடம் 8 வரிகள் ] | 6 |
| 14. | அறவுரைப் பகுதி - நன்னெறி [ மனப்பாடம் 4 வரிகள் ] | 11 |
| 15. | செம்மொழித் தமிழுக்கு சிறப்பு சேர்த்த தமிழறிஞர்கள் | 16 |
| 16. | தொடர்நிலைச் செய்யுள் - ஆசிய ஜோதி | 23 |
| 17. | நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர் | 33 |
| 18. | அபிராமி அந்தாதி [மனப்பாடம் 8 வரிகள்] | 41 |
| 19. | அழகிய நகரில் ஒரு நாள் [ பயணக் கட்டுரை ] | 44 |
| 20. | பசவண்ணர் வசனம் [ மனப்பாடம் 7 வரிகள் ] | 56 |
| 21. | விடுதலை வீரன் | 61 |
| 22. | பல்சுவைப் பாடல் ( சிலேடை வெண்பா ) [ மனப்பாடம் 4 வரிகள் ] | 73 |
| 23. | நீதி நூல்கள் கூறும் வாழ்க்கை நெறி | 79 |
| 24. | "எல்லாம் நன்மைக்கே" [ கதை ] | 88 |


@KTBS NOT TO BE REPUBLISHED

Z5A4D5

## பாடம் 12

# கடவுள் வாழ்த்து

## போற்றுவோம்

புகார் நகரிலே கோவலனின் தந்தையும் கண்ணகியின் தந்தையும் தம் மக்கள் இருவருக்கும் மணஞ் செய்வித்த சிறப்பையும். மணமக்களை மாதர்கள் பலர் சூழ்ந்து நின்று மங்கல வாழ்த்து உரைத்ததையும் கூறும் பகுதி இது .



@KTBS NOT TO BE REPUBLISHED

திங்களைப் போற்றுதும் ! திங்களைப் போற்றுதும் ! -
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்று இவ்
அம் கண் உலகு அளித்த லான் .

ஞாயிறு போற்றுதும் ! ஞாயிறு போற்றுதும் ! -
காவிரி நாடன் திகிரிபோல், பொன் கோட்டு
மேரு வலந் திரித லான் .

மா மழை போற்றுதும் ! மா மழை போற்றுதும் ! -
நாம நீர் வேலி உலகிற்கு, அவன் அளிபோல்,
மேல்நி ன்று தான் சுரத்த லான் .

- இளங்கோவடிகள்

**ஆசிரியர் குறிப்பு :**

இளங்கோவடிகள், சேர அரசன் நெடுஞ்சேரலாதனுக்கும், நற்சோனைக்கும் மகனாகப் பிறந்தார். இவர் இளமையிலேயே துறவு வாழ்க்கையை மேற் கொண்டதால் ' அடிகள் ' எனப் போற்றப்படுகிறார். இவர் சமண சமயத்தவர். இவரது காலம் கி. பி. 2 ம் நூற்றாண்டு .

**நூல் குறிப்பு :**

இப்பாடல் சிலப்பதிகாரம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் கூறுகளும் அமைந்த பெருங்காப்பியம். இந்நூலை நாடகக் காப்பியம் என்றும் கூறுவர். இந்நூல் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது .

©KTBS NOT TO BE REPUBLISHED

**அருஞ்சொற் பொருள் :**

திங்கள் - நிலவு ; ஞாயிறு - சூரியன் ; போற்றுவோம் - வணங்குவோம்; திகிரி - சக்கரம் ; பொன்கோட்டு - மலை முகடு ; நாமநீர் - சந்தரு கடல் ; வலம் திரிதல் - சுற்றி வருதல் ; அளிபோல் - அருளைப்போல் .

**கருத்துரை :**

பூந்தாது சொரியும் ஆத்தி மாலையினை உடைய சோழனின் அருள் மிகுந்த வெண்கொற்றக் குடையினைப் போன்று இந்த அழகிய உலகிலே தன்னொளி பரப்புகின்றதால், நாம் இத்திங்களைப் போற்றுவோம் .

காவிரி நாடனின் சக்கரம் போல அழகிய மலையினைச் சுற்றி வலம் வருவதால் நாமும் சூரியனைப் போற்றுவோம் .

அச்சந்தரு கடல்களை வேலியாக உலகம் சூழ்ந்துள்ளதேனும், அவன் அருளைப் போலத் தான் மேல் நின்று சுரந்து, அனைவரையும் வாழ்விக்கின்றதனால் நாமும் அந்த மழையைப் போற்றுவோம் .

## பயிற்சி

**அ. குறு வினா :**

1. சிலப்பதிகாரத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன ? அவை யாவை ?
2. நாம் ஏன் மழையைப் போற்ற வேண்டும் ?
3. கொங்கு எந்த நாட்டைக் குறிக்கிறது ?
4. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார் ?
5. இப்பாடல் ஆசிரியரை அடிகள் எனப் போற்றக் காரணம் என்ன?

**ஆ. நெடு வினா :**

1. இப்பாடல் ஆசிரியர் ஞாயிறு, திங்கள், மழை - இவற்றை எவ்வாறு போற்றுகிறார் ?

**இ. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. சிலப்பதிகாரத்தை _________ காப்பியம் என்று கூறுவர் .
2. முத்தமிழ் கூறுகளான _______, _______, _______ என அமைந்த பெருங்காப்பியம் _________ .

**ஈ. பிரித்து எழுதுக :**

1. வெண்குடை -
2. திகிரிபோல் -
3. மாமழை -
4. வலந்திரிந்தலான் -

**உ. சேர்த்து எழுதுக :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கண் | + | உலகு | = |
| 2. | காவிரி | + | நாடான் | = |
| 3. | மா | + | மழை | = |
| 4. | மேல் | + | நின்று | = |

NOT TO BE REPUBLISHED @KTBS

**ஊ. எதிர்ச் சொல் எழுதுக :**

1. போற்றுவோம் ×
2. வெண்மை ×
3. மேல் ×
4. வலம் ×

**எ. சிலப்பதிகாரப் பாடலில் வந்துள்ள ஒலிநயமான சொற்களை எடுத்து எழுதுக .**

**ஏ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக .**

1. ‘ நாம நீர் வேலி உலகிற்கு ’ - இந்த அடியில் நீர் என்பது .

   அ) ஆறு , ஆ) ஏரி , இ) கடல் .

2. ‘ கொங்கு அலர் ’ என்பது .

   அ) சோழனின் அருள் , ஆ) சேரனின் அருள் ,

   இ) பாண்டியன் அருள் .

**ஐ. படித்து அறிக :**

| புலவர்கள் | இயற்றிய நூல் |
|---|---|
| இளங்கோவடிகள் | சிலப்பதிகாரம் |
| திருத்தக்க தேவர் | சீவக சிந்தாமணி |
| திருவள்ளுவர் | திருக்குறள் |
| சீத்தலைச் சாத்தனார் | மணிமேகலை |
| நாதகுத்தனார் | குண்டலகேசி . |

**மொழித்திறன் வெளிப்பாடு :**

**தமிழுக்கு மொழி பெயர்க்க :**

There were two goats, They wanted to cross the bridge. They both were understanding in nature, they were willing to adjust. One goat squatted on the bridge while the other crossed over this goat. After that goat had crossed, the goat which had squatted got up and walked across the bridge. Thus , both the goats crossed the bridge what happens when both the goats are adamant to cross at the same time ?

@KTBS NOT TO BE REPUBLISHED



[ Pride Leads To Fall Patience Pays ]



@KTBS
NOT TO BE REPUBLISHED

# பாடம் 13

# நாட்டு வாழ்த்து

## ( மனப்பாடம் )

இந்திய நாடிது என்னுடை நாடே
    என்று தினந்தினம் நீயதைப் பாடு
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
    தூங்கிக் கிடந்தது போனது மாள
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
    வாடின காலங்கள் ஓடின தம்பி
இந்தத் தினம்முதல் " இந்திய நாடு
    என்னுடை நாடெ " ன்ற எண்ணத்தைக் கூடு .

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் .**

@KTBS
NOT TO BE REPUBLISHED



**இந்தியா (India map)**

**நூல் குறிப்பு :**

‘ நாமக்கல் கவிஞர் பாடல்கள் ’ என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது. அந்நூல் தெய்வத்திருமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், அறிவுரை மலர், பல்சுவை மலர் என்னும் தலைப்புகளில் கவிஞர் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. கவிஞர் சத்தியாகிரகத் தொண்டர்கள் பாடுவதற்கென இயற்றிய சில பாடல்கள் என்னுடைய நாடு என்னும் தலைப்பில் தேசியமலரில் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களுள் ஒன்றே நமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடலாகும் .

**ஆசிரியர் குறிப்பு :**

இராமலிங்கனார் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் 19-10-1888 அன்று வெங்கட்ராமன் என்பார்க்கும் அம்மணியம்மாளுக்கும் எட்டாவது மகனாகத் தோன்றினார். முத்தமிழிலும், ஓவியக்கலையிலும் சிறந்து விளங்கினார். இவர் சிறந்த விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் வழி நடைப் பாடலாகப் பாடுவதற்கு கவிஞர் இயற்றிய .

‘ கத்தியின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர் ’

என்னும் பாடல் விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவராலும் உணர்ச்சியுடன் பாடப் பெற்ற புகழ்மிக்கப் பாடலாகும். நடுவணரசு அவருக்கு " பத்மபூஷண் " விருதளித்துப் போற்றியது. அவர் 24.8.1972 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார் .

NOT TO BE REPUBLISHED @KTBS

**அருஞ்சொற் பொருள் :**

தினந்தினம் - நாள்தோறும் ; சொந்தமில்லாதவர் - உரிமையில்லாதவர்; தூங்கிக் கிடந்தது - விழிப்புணர்ச்சியற்றிருந்தது ; மாள - சாக ( இல்லாது போக); வாடின - தளர்ந்த , சோர்வுற்ற ; எண்ணத்தைக் கூடு - எண்ணத்தைக் கொள் .

**கருத்துரை :**

என்னுடைய நாடு இந்தியா என்று தினந்தோறும் பாடுக. நாம் நம் நாட்டின் மீது கவனமில்லாமல் இருந்ததால் தான் பிற நாட்டவர்கள் நம்மை ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு வெளியிலிருந்து வந்து போனவர்களை நம்பியிருந்த காலங்கள் ஓடிப் போயின. இத்தினம் முதல் இந்திய நாடு என்னுடையது என்ற எண்ணத்தைக் கொள்ளல் வேண்டும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**பயிற்சி**

**அ. குறு வினா :**

1. நம் நாடு எது ?
2. தினந்தோறும் எதனைப் பாடுதல் வேண்டும் ?
3. நாம் தூங்கிக் கிடந்ததால் நிகழ்ந்ததென்ன ?
4. நாம் வாடியதற்குக் காரணம் என்ன ?
5. இத்தினம் முதல் நாம் எவ்வெண்ணத்தைக் கொள்ளல் வேண்டும்?
6. நாமக்கல் கவிஞரை அரசு எவ்வாறு பெருமைப் படுத்தியது ?
7. கவிஞர் சிறை செல்லக் காரணம் என்ன ?

**ஆ. நெடு வினா :**

1. நாமக்கல் கவிஞர் நம் நாட்டைப் பற்றிக் கூறுவது யாது ?
2. நாமக்கல் கவிஞர் பற்றிக் குறிப்பு வரைக.
3. கவிஞர் தொண்டர்களுக்குப் பாடிய வழிநடைப் பாடலை எழுதுக

**இ. பிரித்து எழுதுக :**

நாடிது =

தினந்தினம் =

நீயதை =

சொந்தமில்லாதவர் =

**ஈ. சேர்த்து எழுதுக :**

தூங்கி + கிடந்தது =

வந்தவர் + போனவர் =

இந்தியா + நாடு =

எண்ணத்தை + கூடு =

**உ. எதிர்ச்சொல் தருக :**

இது ×

வந்தவர் ×

தூங்கி ×

முதல் ×

**ஊ. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

தினந்தினம் , வாடின , காலங்கள் , விடுதலை .

**எ. நாட்டு வாழ்த்துப் பாடலில் வந்துள்ள ஒலி நயமிக்கச் சொற்களை எழுதுக :**

© KTBS NOT TO BE REPUBLISHED

ஏ. **செயல்பாடுகள் :**

1. கவிஞர் தொண்டர்களுக்கு வழிநடைப்பாடலாக இயற்றிய ' கத்தியின்றி ரத்த மின்றி ' என்ற பாடலை பாடிப் பழகுக :
2. பிற கவிஞர்கள் எழுதிய சுதந்திரக் கருத்துக்களைக் கொண்ட பாடல்களைத் தொகுத்து எழுதுக :
3. ஆசிரியர் உதவி கொண்டு ' உப்பு சத்தியாகிரகம் ' நாடகம் நடித்துப் பழகுக :

ஐ. **விழுமிய கல்வி :**

வயதானவர் சாலையை கடக்க முயலுகிறார் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

1. பள்ளிக்கு நேரமாயிற்று என்று சென்று விடுவேன் .
2. வேறு ஒருவரிடம் சொல்லி உதவி செய்ய வைப்பேன் .
3. பள்ளிக்கு நேரமானாலும் கவலையில்லை என்று நானே சாலையை கடக்க உதவி செய்வேன் .

❊ ❊ ❊

©KTBS NOT TO BE REPUBLISHED

E4P1X4

# பாடம் 14

## 2. அறவுரைப் பகுதி

### நன்னெறி ( மனப்பாடம் )

**உள்ளம் கவர்ந்(து) எழுந்(து) ஓங்கு சினம் காத்துக்**
**கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளம்**
**தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து**
**விடுத்தல் அரிதோ விளம்பு .**

**- சிவப்பிரகாசர்.**

@KTBS NOT TO BE REPUBLISHED

**ஆசிரியர் குறிப்பு :**

சிவபிரகாசர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் பிறந்தார். தந்தையார் திரு. குமாரசாமிதேசிகர். தாயார் பெயர் தெரியவில்லை சிவபிரகாசர் சோணசைலமாலை, நால்வர் நான்மணி மாலை, பிரபுலிங்க லீலை மற்றும் சீகாளத்திப் புராணம் முதலிய நூல்களை எழுதியுள்ளார் .

சிவப்பிரகாசரால் இயற்றப்பட்ட ' நன்னெறி ' என்னும் வெண்பா பாடல்களிலிருந்து ஒரு பாடல் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது .

**அருஞ்சொற் பொருள் அறிக :**

கவர்ந்து - தன்வசப்படுத்தி ; எழுந்து - வெளிப்பட்டு ; ஓங்கு - மிகுதியாக; சினம் - கோபம் ; தடங்கரை - பெரியகரை ; அரிதோ - அருமையோ, உயரியதோ ; விளம்பு - கூறு, சொல்லு .

**பாடலின் கருத்துரை :**

திரண்டு வரும் வெள்ளத்தைக் கரையமைத்துத் தடுத்தல் அரிதா ? அக்கரையைப் பெயர்த்து வெள்ளத்தை வெளிவிடுதல் அரிதா ? எனவே மனத்தில் எழும் மிகுதியான சினத்தை அடக்கி காத்து கொள்ளும் குணமே உயர்ந்த குணமாகும் .

## பயிற்சி

**அ. விடை தருக :**

1. நன்னெறி பாடலின் ஆசிரியர் பெயர் என்ன ?
2. ஆசிரியர் எதை அடக்கிக் காத்து கொள்ள வேண்டும் என்றார் ?
3. உயர்ந்த குணம் எது ?

**ஆ. இடம் சுட்டி விளக்குக :**

1. வெள்ளம் தடுத்தல் அரிதோ தடங்கரைதான்
   பேர்த்து விடுத்தல் அரிதோ விளம்பு .

**மொழிப்பயிற்சி :**

**இ. விடுபட்ட இடத்தை சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக :**

1. நன்னெ__[ ரி , றி ]
2. கு__ம் [ ன , ண ]
3. வெள்__ம் [ ள , ல ]
4. காஞ்சிபு__ம் [ ற , ர ]

**ஈ. சேர்த்தெழுதுக :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வெளி | + | பட்டு | = |
| 2. | நூறு | + | ஆண்டு | = |
| 3. | அந்த | + | கரை | = |
| 4. | தடம் | + | கரை | = |
| 5. | கவர்ந்து | + | எழுந்து | = |

**உ. பிரித்தெழுதுக :**

1. நான்மணி =
2. நன்னெறி =
3. குணமென்க =
4. சினம்காத்து =

@KTBS NOT TO BE REPUBLISHED

**ஊ. எதிர்ச்சொல் ருக :**

1. கவர்தல் ×
2. தடுத்தல் ×
3. இங்கே ×
4. எழுந்து ×
5. இக்கரை ×

**எ. தமிழ் பெயர்களை அறிவோம் :**

1. சைக்கிள் - மிதிவண்டி
2. பிளாட்பாரம் - நடைமேடை
3. ஆபீஸ் - அலுவலகம்
4. சினிமா - திரைப் படம்
5. டைப்ரைட்டர் - தட்டச்சுப் பொறி
6. ரோடு - சாலை
7. ஃபிளைட் - விமானம்
8. பேங்க் - வங்கி
9. தியேட்டர் - திரைஅரங்கு
10. ஆஸ்பத்திரி - மருத்துவ மனை

**ஏ. கீழ்கண்ட பெயர்களுக்கு தகுந்த தமிழ் பெயர்களை ஆசிரியரிடம் கேட்டு எழுதுக :**

1. கம்ப்யூட்டர் - ________
2. காலேஜ் - ________
3. ஸ்கூல் - ________
4. சயின்ஸ் - ________
5. நம்பர் - ________

@KTBS
NOT TO BE REPUBLISHED

# இலக்கணம்

## புணர்ச்சி

ஒரு சொல் இன்னொரு சொல்லுடனோ, விகுதியுடனோ, சேருவது புணர்ச்சி எனப்படும் அல்லது நிலைமொழி இறுதியானது வருமொழி முதலுடன் சேரும் சேர்க்கைக்குப் புணர்ச்சி என்று பெயர் .

முதலில் நிற்கும் சொல் ' நிலைமொழி ' என்றும் அதனோடு சேரும் சொல், விகுதி ' வருமொழி ' என்றும் அழைக்கப்படும் .

புணர்ச்சி இரண்டு வகைப்படும் : அவை

1. இயல்புப் புணர்ச்சி, 2. விகாரப் புணர்ச்சி

### 1. இயல்புப் புணர்ச்சி :

இரண்டு சொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இல்லையென்றால் அது இயல்பு புணர்ச்சி எனப்படும் .

**எடுத்துக்காட்டு :**

| | | | | |
|---|---|---|---|---|
| மலை | + | வளம் | = | மலைவளம் |
| மா | + | மரம் | = | மாமரம் |
| ஓடி | + | வந்தான் | = | ஓடிவந்தான் . |

### 2. விகாரப் புணர்ச்சி :

இரண்டு சொற்கள் சேரும்போது நிலைமொழியிலோ, வருமொழியிலோ மாற்றம் ஏற்பட்டால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும் .

**எடுத்துக்காட்டு :**

| | | | | |
|---|---|---|---|---|
| **மலை** | **+** | **பக்கம்** | **=** | **மலைப்பக்கம்** |
| **அவரை** | **+** | **காய்** | **=** | **அவரைக்காய்** |
| **நிலா** | **+** | **சோறு** | **=** | **நிலாச்சோறு** |

தோன்றல் , திரிதல் , கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**1. தோன்றல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ( எ.கா ) | புளி | + | பழம் | = | புளியம்பழம் |
| | பள்ளி | + | கூடம் | = | பள்ளிக்கூடம் |
| | வாழை | + | பழம் | = | வாழைப்பழம் |

**2. திரிதல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ( எ.கா ) | பல் | + | பொடி | = | பற்பொடி |
| | கல் | + | குடம் | = | கற்குடம் |
| | பொன் | + | பல் | = | பொற்பல் |

**3. கெடுதல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ( எ.கா ) | வானம் | + | வில் | = | வானவில் |
| | மரம் | + | வேர் | = | மரவேர் |
| | ஊருக்கு | + | அழகு | = | ஊருக்கழகு |

**வினாக்கள் :**

1. புணர்ச்சி என்றால் என்ன ?
2. புணர்ச்சி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன ?
4. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன ?
5. விகாரப் புணர்ச்சிகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
6. கீழ்வரும் புணர்ச்சிகள் எந்தெந்த வகைகளைச் சேர்ந்தவை எனக் குறிப்பிடுக :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பட்டு | + | பூச்சி | = |
| 2. | மரம் | + | கிளை | = |
| 3. | கடல் | + | கரை | = |
| 4. | கல் | + | தரை | = |
| 5. | தீ | + | கதிர் | = |
| 6. | போய் | + | பார்த்தேன் | = |
| 7. | பாடம் | + | நூல் | = |
| 8. | வந்து | + | சேர்ந்தேன் | = |

❋ ❋ ❋

@KTBS NOT TO BE REPUBLISHED

## பாடம் 15

# செம்மொழித் தமிழுக்கு சிறப்பு சேர்த்த தமிழறிஞர்கள்

## உயர்தனிச் செம்மொழி

தற்காலச் சூழலில் ஏறத்தாழ 6060 மொழிகள் உலகில் பேசப்படுகின்றன. முதன் முதலாக ஒரு மூலமொழி இருந்திருக்க வேண்டும் என ஆராய்ந்தால் அந்த மூலமொழி தமிழாகவே இருத்தல் வேண்டும். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தந்த கால்டிவெல் 1856 - ல் உலக மொழிகள் பலவற்றை ஆராய்ந்தார். இந்தோ ஐரோப்பிய மொழிகள், செமித்திய மொழிகள், எலாமைட் மொழி, சித்திய, ஜப்பானிய, ஆஸ்ரேலிய பழங்குடி மொழி அனைத்தையும் ஆராய்ந்தபின் இவற்றில் மூத்தமொழி தமிழ் என்றார் .

இத்தகைய தொன்மையும், வளமையும் வாய்ந்த தமிழ் மொழியை வளர்க்க பழங்காலத்திலிருந்து பல தமிழறிஞர்கள் சேவை செய்து வருகிறார்கள். அப்படி தமிழுக்கு சேவை செய்து சிறப்பு சேர்த்த தமிழறிஞர்கள் சிலரை குறித்து இங்கே காண்போம் .

NOT TO BE REPUBLISHED @KTBS

### 1. நா. மு. வேங்கடசாமி நாட்டார் ( 1884 - 1944 )



சிறந்த தமிழறிஞரான இவரது நூல்கள் கண்ணகியின் வரலாறும் கற்பும் மாண்பும், கள்ளர் சரித்திரம், வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி, கட்டுரைத்திரட்டு, நக்கீரர், கபிலர் போன்றவையாகும் .

### 2. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (1815 - 1876 )



‘ தமிழ்த்தாத்தா ’ என்று போற்றப்படும் உ. வே. சாமிநாத அய்யர் பிள்ளைத்தமிழ், அந்தாதி, சிற்றிலக்கியங்கள் பாடுவதில் வல்லவர். திருவாவடுதுறை ஆதினமடம் இவருக்கு மகாவித்துவான் பட்டம் வழங்கியது .

### 3. பாண்டித்துரைத் தேவர் ( 1867 - 1911 )



நான்காம் தமிழ்ச்சங்கத்தை மதுரையில் நிறுவியவர். பாலவநத்தம் ஜமீன்தார். வ.உ.சிதம்பரனாரின் தென்னிந்திய நாவாய் கழகத்தின் தலைவர். கப்பல் நிறுவனத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபாய் பங்களித்தவர். தமிழில் பிழையான புத்தகங்கள் வரக்கூடாது என்பதில் கண்டிப்பானவர். இவர் காலத்தில் வாழ்ந்த ' ஸ்காட் ' என்னும் வெள்ளையன் தவறாக பிழையாக அச்சிட்டான். அந்தப் பிரதிகள் அனைத்தையும் விலை கொடுத்து வாங்கி அதனை நெருப்பிலிட்டார் .

### 4. கா. நமச்சிவாய முதலியார் ( 1876 - 1934 )

தமிழ் வித்துவான் தேர்வைத் தொடங்கியவர், தொல்காப்பியம், சொல்லதிகாரம் [ இளம்பூரணர் உரை ] நன்னூல் தணிகைப் புராணம், குறுந்தொகை போன்ற நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டவர். சிறுவர்களுக்கான ' வாக்கிய இலக்கணம் ' எழுதியவர். திருவிளையாடற் புராணத்தை வசன நடையில் எழுதியவர்.

### 5. வீரமாமுனிவர் ( 1680 - 1746 )



இத்தாலியில் பிறந்து தமிழகம் வந்த இவர் கான்ஸ்டான்டி நோபிள் என்கிற பெயரை விட வீரமாமுனிவர் என்கிற பெயரால் சிறப்புப் பெற்றார். 1710 - ல் தமிழகம் வந்தவர். எழுத்து அகரமுதலி, மொழிபெயர்ப்பு, உரைநடை இலக்கணம், காவியம், பிரபந்தம் என்று பல துறை நூல்களைத் தந்தவர். திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் .

### 6. ஜி. யு. போப் ( 1820 - 1908 )



அமெரிக்காவில் பிறந்தவர். 1839 - ல் தமிழகம் வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களில் தமிழைக் கற்றார். நாற்பது ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்தார். கிறிஸ்துவ சமய போதகர் இவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தமிழின் மீது கொண்ட பற்றின் காரணமாக தனது கல்லறையில் " ஓர் தமிழ் மாணவன் உறங்குகிறான் " என்று எழுதும்படி வேண்டினார். தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரத்தில் போப் கல்லூரி இவரது நினைவை போற்றிக் கட்டப்பட்டது .

### 7. பாவேந்தர் பாரதிதாசன் ( 1891 - 1964 )



‘ தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிர்க்கு நேர் ’ என்று பாடிய மகாகவிஞர். புதுச்சேரியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம் ‘ ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் ’ என்கிற பெயரில் 1935 - ல் இந்தியாவின் முதல் கவிதை இதழைத் துவக்கியவர். திராவிட இயக்கத்தின் உணர்ச்சி பூர்வமான தமிழின் அறிவுரைகளை கவிதைகள் மூலம் பரப்பியவர். பாண்டியன் பரிசு, குடும்பவிளக்கு, இருண்ட வீடு, இசையமுது, ஆத்திச்சூடி போன்ற பல கவிதை நூல்களை எழுதி செம்மொழித் தமிழுக்கு சிறப்பு சேர்த்தவர். பாரதியின் மீது ஈடுபாடுகொண்டு பாரதிதாசன் என பெயர் சூட்டிக் கொண்டவர் .

### 8. உ. வே. சாமிநாதய்யர் ( 1855 - 1942 )



தமிழ் இலக்கிய நூல்களை தேடிப்பிடித்துப் பதிப்பித்தவர். ஓலைச்சுவடிகளில் அழியும் நிலையில் இருந்த இலக்கியங்களை தமிழுக்கு கொண்டு வந்து சேர்த்தவர். 90 புத்தகங்களை அச்சிட்டவர். மூன்றாயிரம் ஏட்டுச் சுவடிகளை பாதுகாத்தவர். சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு நூல்களைப் பதிப்பித்தவர் .

### 9. மகாகவி பாரதியார் ( 1882 - 1921 )



உலக அளவில் போற்றப்படும் சிறந்த கவிஞர், மொழி, தேசம், இரண்டையும் நேசித்தவர். ‘ வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர் ’ என்று தமிழையும், தமிழ் மக்களையும் வாழ்த்தியவர். ஆங்கிலக் கவி ஷெல்லியிடம் ஈடுபாடு கொண்டவர். குயில்பாட்டு, கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவை இவரது குறுங்காவியங்கள் காந்தியடிகளுக்கு ‘ மகாத்மா ’ என்று சிறப்புப் பட்டம் வழங்கியவர். ‘செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே ’ என்று கவிதை முழக்கம் செய்தவர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**10. கி. ஆ. பெ. விசுவநாதன் ( 1889 - 1994 )**



' முத்தமிழ் காவலர் ' என அழைக்கப்பட்டவர். இந்தியை கட்டாயமாக திணிக்க அரசாங்கம் எண்ணிய போது அதைத் தகர்க்க முன்னின்ற தமிழறிஞர். திருக்குறள் புதை பொருள், வள்ளுவர் உலகம், தமிழ்ச்செல்வம், தமிழின் சிறப்பு, திருக்குறள் கட்டுரைகள் வள்ளுவரும் குறளும், வள்ளுவர் உலகம் போன்ற நூல்களை எழுதியவர். சித்த மருத்துவத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ' தமிழர் புலவர் குழு ' என்கிற அமைப்பை உருவாக்கியவர் .

**படித்துணர்க**

## ஆசிரியர் குறிப்பு :

அனிதா கு. கிருஷ்ண மூர்த்தி திருப்பூர் தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவராக உள்ளார். தமிழ்நாடு அரசின் சிறந்த எழுத்தாளர் பரிசும் பாராட்டிதழும் பெற்ற கவிஞர் அனிதா கு. கிருஷ்ண மூர்த்தி. மும்பை மாநகர தமிழர்களின் வரலாறு, தமிழர் தந்தை வ. உ. சிதம்பரனார், தேசியக் கொடியின் தந்தை திருப்பூர் குமரன், என்மொழி செம்மொழி, தந்தை பெரியார் சிந்தனைகள், சூரியமழை, கைமாறும் கணையாழிகள், தேரில் வருகிறாள் தேவதை, புன்னகையும் புல்லாங்குழலும், ஒரு ரோஜாபூவும் இரண்டு உதடுகளும், வசந்தகாலத் தேரோட்டம், மனதைத் திற அறிவு வரட்டும், காதல் சந்தை எனப் பல புத்தகங்களை எழுதி உள்ளார். தற்போது ' கர்நாடக மாநிலத் தமிழர்களின் வரலாறு ' என்ற நூலை எழுதி வருகிறார் .

## நூல்குறிப்பு :



இந்திய நாட்டில் பல மாநிலங்களில் பயணம் செய்து அங்கு வாழும் தமிழர்கள் குறித்து ஆய்வு நூல்கள் எழுதி வருபவர் அனிதா கு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள். இவர் எழுதிய ' என் மொழி செம்மொழி ' என்ற நூலிலிருந்து எடுத்து இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது. செம்மொழித் தமிழுக்கு சிறப்பு சேர்த்த தமிழறிஞர்கள் 84 பேரைக் குறித்து விரிவாக ஆய்ந்து எழுதியுள்ளார். அவற்றிலிருந்து 10 பேர்களை தேர்ந்தெடுத்து இக்கட்டுரையில் எழுதியுள்ளோம். கோவை செம்மொழி மாநாட்டிற்காக ஆசிரியர் இந்நூலை எழுதினார் .

## பயிற்சி

**அ. ஓரிரு வரிகளில் விடை எழுதுக :**

1. உலகில் எத்தனை மொழிகள் பேசப்படுகிறன்றன ?
2. உலகின் மூல மொழி எது ?
3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதியவர் யார் ?
4. ‘ தமிழ்த்தாத்தா ’ எனப் போற்றப்படுபவர் யார் ?
5. மகாவித்துவான் பட்டம் பெற்றவர் யார் ?
6. நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவியவர் யார் ?
7. சிறுவர்களுக்கான வாக்கிய இலக்கணத்தை எழுதியவர் யார் ?
8. வீர மாமுனிவர் எங்கு பிறந்தார் ?
9. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிப்பெயர்த்தவர் யார் ?
10. ஜி. யு. போப் எந்த நாட்டில் பிறந்தார் ?

**ஆ. மூன்று அல்லது நான்கு வரிகளில் எழுதுக :**

1. ஜி. யு. போப் எங்கு, எப்போது பிறந்தார் ?
2. கா. நமச்சிவாய முதலியார் பதிப்பித்த நூல்கள் யாவை ?
3. வீர மாமுனிவர் பற்றி எழுதுக ?
4. ஜி. யு. போப் மொழிபெயர்த்த நூல்கள் யாவை ?
5. பாவேந்தர் பாரதிதாசன் எவ்வாறு கவிதைகளை எழுதினார் ?
6. உ. வே. சாமிநாதய்யர் எவ்வாறு நூல்களை தமிழுக்கு கொண்டுவந்தார் ?

©KTBS NOT TO BE REPUBLISHED

7. மகாகவி பாரதியார் எழுதிய நூல்கள் யாவை ?

8. கி. ஆ. பெ. விசுவநாதன் இயற்றிய நூல்கள் யாவை ?

**இ. ஐந்து அல்லது ஆறு வரிகளில் எழுதுக :**

1. தமிழை ஏன் உயர்தனிச் செம்மொழி என்று அழைக்கிறோம் ?

2. உலக மொழிகள் சிலவற்றை எழுதுக ?

3. நா. மு. வேங்கடசாமி நாட்டார் இயற்றிய நூல்கள் யாவை ?

4. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைப் பற்றி எழுதுக ?

5. பாண்டித் துரைத் தேவரைப் பற்றி எழுதுக ?

6. வீரமாமுனிவர் எங்கு எப்போது பிறந்தார் ? அவர் தந்த நூல்கள் யாவை ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

**ஈ. எதிர்ச் சொல் எழுதுக :**

1. சிறப்பு ×

2. பலவற்றை ×

3. சிலர் ×

4. தவறாக ×

5. வாங்கி ×

6. வந்தார் ×

**உ. பிரித்தெழுதுக :**

1. கட்டுரைத்திரட்டு =

2. தமிழ்த்தாத்தா =

3. சொல்லதிகாரம் =

4. வெளியிட்டவர் =

5. காந்தியடிகளுக்கு =

**ஊ. வாக்கியத்தில் எழுதுக :**

1. ஏறத்தாழ
2. ஆராய்ந்தபின்
3. நாவாய்
4. பயணம்
5. இலக்கியம்

**செயல்பாடுகள்**

1. உனக்குத் தெரிந்த தமிழ் அறிஞர்களின் பெயர்களை பட்டியல் செய்க .
2. அனிதா கிருஷ்ணமூர்த்தி எழுதிய நூல்களைப் பட்டியல் செய்க.

**விழுமியக் கல்வி :**

தமிழ்மொழி கற்றவர்களின் பூதஉடல் இவ்வுலகிலிருந்து மறைந்தாலும் அவர்களுடைய புகழ் இப்பூவுலகில் என்னென்றும் அழியாமல் நிலைத்து நிற்கிறது. அதைப்போல தமிழராகிய நாமும் செம்மொழித் தமிழை கசடற கற்று அழியா புகழை பெற வேண்டும் .

✤ ✤ ✤

@KTBS NOT TO BE REPUBLISHED

## பாடம் 16

# தொடர் நிலைச் செய்யுள்

## ஆசிய ஜோதி

ஆசியாக் கண்டத்தின் பெரும்புகழ்ப் பேரொளியாக விளங்கியவர் புத்தர் பிரான். அவர் உலக உயிர்களின் மீது அன்பு கொண்டு வாழ்ந்து காட்டியவர். அவரது அருள் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் சிறு கதைப் பகுதியே ‘ ஆசிய ஜோதி ’ என்னும் நூலாகும் .

### புத்தரும் ஏழைச் சிறுவனும்

அரண்மனையை விட்டு வெளியே வந்த புத்தர், வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஆயர் குலச்சிறுவன் ஒருவன், தன் தாழ்ந்த குடிப்பிறப்பை எண்ணிக் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். ‘ பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டக் கூடாது ’ என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இங்குக் கூறப்படுகிறது .

@KTBS NOT TO BE REPUBLISHED

### சிறுவன் புத்தரைக் காணுதல்

ஆடுகள் மேய்த்து வரும் - ஒருவன்
    ஆயர் குலச் சிறுவன்
வாடிக் கிடந்தவரைச் - செல்லும்
    வழியின் மீது கண்டான் !    1

### சிறுவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே - பிறந்த
    மாதவச் செல்வன் முகம்
வெயிலில் வெந்திடாமல் - தழைகள்
    வெட்டி அருகில் நட்டான் !    2



தெய்வ குலத் திவனை - எளியேன்
  தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே - சிறிது
  சிந்தை தயங்கி நின்றான் ! 3
உள்ளம் தெளிந்துடனே - வெள்ளாடு
  ஒன்றை அழைத்து வந்து
வள்ளல் மயக்கொழிய - மடுவை
  வாயில் கறந்து விட்டான் . 4

## புத்தர் எழுந்து பால் கேட்டல்



© KTBS NOT TO BE REPUBLISHED

நிலத்திற் கிடந்த ஐயன் - மெல்ல
    நிமிர்ந்து தலைதூக்கிக்
‘ கலத்தினிலே கொஞ்சம் - பாலைக்
    கறந்து தருவாய் ! ’ என்றான் . 5

## சிறுவன் மறுத்தல்

‘ ஐயையோ ! ஆகா ’ தென்றான் ! - சிறுவன்
‘ அண்ணலே ! யானும் உனைக்
கையினால் தீண்ட வொண்ணா - இடையன் ஓர்
    காட்டு மனித ளென்றான் ! 6

## புத்தர் அறிவுரை

உலகம் புகழ் பெரியோர் - இந்த
    உரையினைக் கேட்டந் நாள்
அலகில் கருணை யினால் - சொன்ன
    அமுத மொழி இதுவாம் . 7

‘ இடர் வரும் போதும் - உள்ளம்
    இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் - மாந்தர்
    உறவு கொள்ளவர் அப்பா ! 8

ஓடும் உதிரத்தில் - வடிந்து
    ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த் தாலும் - சாதி
    தெரிவ துண்டோ அப்பா ? 9

@KTBS
NOT TO BE REPUBLISHED

எவர் உடம் பினிலும் - சிவப்பே
இரத்த நிற மப்பா !
எவர் விழி நீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குண மப்பா ! 10

பிறப் பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாரா தப்பா !
சிறப்பு வேண்டு மெனில் - நல்ல
செய்கை வேண்டு மப்பா . 11

நன்மை செய் பவரே - உலகம்
நாடும் மேற் குலத்தார்
தின்மை செய் பவரே - அண்டித்
தீண்ட ஒண் ணாதார் . 12

## சிறுவன் பால் தருதல்

நிலத் துயர் ஞானி - இவை
நிகழ்த்தி, ‘ என் தம்பீ !
கலத் தினிலே கொஞ்சம் - பாலைக்
கறந் துதா ! ’ என்றான் . 13

ஆயர் சிறு வனும் - கலத்தில்
அளிக்க வாங்கி யுண்டு
தாயி னும் இனியன் - கொண்ட
தளர்ச்சி நீங்கி னனே . 14

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.**

©KTBS NOT TO BE REPUBLISHED

**கருத்துரைகள் :**

1. ஆடுமேய்க்கும் ஆயர் குல சிறுவன் வழியில் விழுந்து மயங்கிக் கிடந்த புத்தரைக் கண்டான் .

2. இந்த உலகம் தழைத்தோங்கவே பிறந்த மாதவம் கொண்ட புத்தரின் முகம் சூரிய வெப்பத்தில் வாடாமல் இருக்கத் தழைகளை வெட்டி அவர் அருகிலே நட்டான் .

3. தெய்வக் குலத்தினில் பிறந்த இந்த மகானை கீழ்க் குலத்தவனான நான் தொடுவது கூடாதென எண்ணி, என்ன செய்வதென சிந்தனை செய்து கொண்டிருந்தான் .

4. ஓரளவு தெளிந்த சிந்தனை பெற்ற உடன், ஓடிச் சென்று ஒரு வெள்ளாட்டைப் பிடித்து வந்து அவரது வாயில் மடியை வைத்துப்பாலைக் கறந்து விட்டான் .

5. மயக்கம் தெளிந்த புத்தர் தலை தூக்கிப் பார்த்து, இன்னும் கொஞ்சம் பால் வேண்டும் இந்தக் கலத்தினில் கொடு எனக்கேட்டார் .

6. ஐயனே! நான் மிகவும் தாழ்ந்த குலமான இடையர் குலத்தவன் என் கையினால் பாலைக்கறந்து தரமாட்டேன், தங்களைத் தொடவும் மாட்டேன், மேலும் நான் ஒரு காட்டு மனிதன் என்றும் கூறி மறுத்தான் .

7. உலகம் புகழும் பெரியோரான புத்தர், அந்தச் சிறுவனின் பேச்சைக் கேட்டு, அன்பினால் உரைத்தவாக்கு இதுதான் .

8. மற்றவர்க்குத் துன்பம் வரும்போதும், இரக்கம் கொள்ளும் போதும் மனிதர்கள் உடன் பிறந்தவர்கள் போன்று உறவு கொள்வார்கள் .

9. "உடலில் ஓடும் இரத்தத்திலும், கண்ணீரிலும் தேடிப்பார்த்தாலும், என்ன சாதி எனக் கண்டறிய முடியுமா தம்பி ? " என்றார் .

10.அனைவருடைய உடம்பில் ஓடும் இரத்தம் சிவப்பே தம்பி! எல்லாருடைய விழிகளிலிருந்து வழியும் கண்ணீரும் உப்பின் தன்மையான உவர்ப்பே! இதுவே இயற்கையும், உலக நியதியும் ஆகும் என்றார் .

11. பிறப்பினால் எவர்க்கும் உலகில் பெருமை வராது தம்பி. சிறப்பும், புகழும் வேண்டுமெனில் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்றார்.

12.நன்மை செய்பவர்களே இந்த உலகத்திற்குத் தேவையான மேற்குலத்தவர்கள். தீமை செய்பவர்தான் தீண்ட தகாதவர்கள் என்றார் .

@KTBS NOT TO BE REPUBLISHED

13.இப்பூமியின் உயர்ந்த ஞானியான புத்தர் இதைக் கூறி "தம்பி! கலயத்தில் எனக்கு சிறிது பாலைக் கறந்து கொடு!" என்றார். இடையர் குலத்துச் சிறுவனும் பாலை வழங்கினான். தாயினும் இனியனான புத்தர் களைப்பு நீங்கப் பாலைப் பருகி மகிழ்ந்தார் .

## ஆசிரியர் குறிப்பு :

ஆசிய ஜோதியை இயற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் குமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் என்னும் சிற்றூரில் 27.8.1876 ஆம் ஆண்டு சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி அம்மாளுக்கு மகனாகப் பிறந்தார். பாமரனும் சுவைத்து மகிழக்கூடிய இனிய எளிய அழகிய கவிதைகளை இவர் இயற்றிப் புகழ்பெற்றார். எனவே இவரை மக்கள் ‘ கவிமணி ’ எனப்பாராட்டினர். இவர் மலரும் மாலையும், குழந்தைச் செல்வம், உமர்கய்யாம் பாடல்கள், மருமக்கள் வழிமான்மியம், தேவியின் கீர்த்தனைகள் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவர் 26.9.1954 இல் மறைந்தார் .

## நூல்குறிப்பு :

உலக உயிர்களின் துன்பத்தைப் போக்கத் தம் அரச வாழ்வைத் துறந்து. ஆண்டியாய் அலைந்து, போதி மரத்தடியில் புதுநெறி கண்டவர் புத்தர். புத்தரின் புனித வாழ்வின் அற்புதங்களை விளக்கும் இனிய கவிதை நூலே ‘ ஆசிய ஜோதி ’ என்னும் நூலாகும். எட்வின் ஆர்னால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ‘ LIGHT OF ASIA ’ என்னும் நூலைத் தழுவித் தமிழில் இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது .

## அ. அருஞ் சொற் பொருள் :

ஆயர்குலம் - இடையர்குலம், கோனார் ; வாடி - வாட்ட முற்று ; வையகம் - உலகம், பார், சீர், ஞாலம் ; மாதவச்செல்வன் - சிறந்த தவத்தைச் செல்வமாகக் கொண்டவன் ; எளியேன் - தாழ்ந்தவன், இழிந்தவன் ; தீண்டல் - தொடுதல் ; சிந்தை - மனம்; மயக்கொழிய - சோர்வு நீங்க, களைப்பு விலக ; மடு - பால் சுரக்கும் மடி; ஐயன் - தலைவன், புத்தன் ; கலம் - கலயம், பாத்திரம் ; அண்ணலே - உயர் குடிப்பிறந்தவரே, உயர்ந்தவர்;

@KTBS NOT TO BE REPUBLISHED

தீண்ட ஒண்ணா - தொடக் கூடாத ; அலகில் - அளவு இல்லாத ; அமுதமொழி - அமுதம் போன்ற இனிய சொற்கள் ; இடர் - துன்பம், இன்னல் ; இரங்கிடும் போதும் - மனம் இரக்கம் கொள்ளும் போதும் ; மாந்தர் - மக்கள் ; உதிரம் - இரத்தம், குருதி, செந்நீர் ; விழி - கண் ; உவர்ப்பு - உப்புத்தன்மை ; நாடும் - விரும்பும் ; தின்மை - தீமை ; அண்டி - நெருங்கி; ஞானி - தெளிந்த அறிவைப் பெற்றவர், மேதை, சான்றோர் ; தளர்ச்சி - சோர்வு .

**ஆ. சொற்களைப் பிரித்தறிக :**

| | | | | |
|---|---|---|---|---|
| குலத்திவனை | = | குலத்து | + | இவனை |
| ஆகாதினி | = | ஆகாது | + | இனி |
| யாதெனவே | = | யாது | + | எனவே |
| வெள்ளாடு | = | வெண்மை | + | ஆடு |
| மயக்கொழிய | = | மயக்கு | + | ஒழிய |
| ஆகாதென்றான் | = | ஆகாது | + | என்றான் |
| தீண்டவொண்ணா | = | தீண்ட | + | ஒண்ணா |
| மனிதனென்றான் | = | மனிதன் | + | என்றான் |
| கேட்டந்நாள் | = | கேட்டு | + | அந்நாள் |
| நிலத்துயர் | = | நிலத்து | + | உயர் |
| வாங்கியுண்டு | = | வாங்கி | + | உண்டு . |

**பொருளுணர் திறன் பயிற்சி**

**இ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. ‘எளியேன் தீண்டலும் ஆகாது இனி’ என்று ஆயர்குலச் சிறுவன் நினைத்தது ஏன் ?

   அ). அவர் யார் என அறியாததால்

   ஆ). அவர் தெய்வ குலத்தைச் சேர்ந்தவர் என்பதால்

@KTBS NOT TO BE REPUBLISHED

இ). அவர் மயக்கமாக இருந்ததால்

2. ‘ உலகம் புகழ் பெரியோன் இந்த உரையினைக்கேட்டு - இந்த உரை ’ எனக் குறிக்கப்படுவது . . . .

அ). நான் பால் கறக்க முடியாது

ஆ).நான் கையினால் தீண்டக் கூடாத காட்டு மனிதன்

இ). நீங்கள் தெய்வ குலத்தைச் சார்ந்தவர்

3. ஆயர் சிறுவன் புத்தர் வாயில் பாலைக் கறந்து விட்டது ஏன் ?

அ). புத்தர் தரையில் படுத்திருந்தமையால்

ஆ).சிறுவனிடத்தில் பாத்திரம் இல்லாமையால்

இ). புத்தரைத் தீண்டக் கூடாது என்பதால்

4. உலகில் சிறப்பு வேண்டுமெனில் புத்தர் ______ வேண்டுமென்கிறார் .

அ). நல்ல பிறப்பு

ஆ).சிறந்த பெருமை

இ). நல்ல செய்கை

5. நிலத்துயர் ஞானி - இத்தொடரில் ‘ நிலத்துயர் ’ என்பதனை எப்படிப் பிரிப்பது சரி ?

அ). நிலம் + துயர்

ஆ). நிலம் + உயர்

இ). நிலத்து + உயர்

**ஈ. சிறு வினா :**

1. ஆயர் குலச்சிறுவன் வழியில் யாரைக் கண்டான் ?
2. புத்தரின் அருகில் எதை வெட்டி நட்டான் ?
3. புத்தர் வாயில் சிறுவன் எதை கறந்து விட்டான் ?
4. புத்தர் எதில் பாலைக் கேட்டார் ?
5. பையன் தன்னை எந்த மனிதனென்றான் ?

©KTBS NOT TO BE REPUBLISHED

6. சாதி எதில் தெரிவதில்லை ?

7. விழிநீரின் இயற்கைக் குணம் எது ?

8. பிறப்பினால் எவர்க்கும் எது வராது ?

9. தாயினும் இனியன் யார் ?

**உ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக :**

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக ?

2. புத்த பிரானின் சோர்வைக் கண்ட ஆயர்குலச் சிறுவன் செய்த உதவி யாது ?

3. புத்தர் ஆயர் குலச் சிறுவனிடம் என்ன கேட்டார் ? அதற்கு அவன் கூறிய மறுமொழி யாது ?

**ஊ. ஐந்து அல்லது ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக :**

1. உலகம் புகழ் பெரியோன் கூறிய அமுத மொழிகளைத் தொகுத்துக் கூறுக ?

2. 'பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை' என்பதனை புத்தர் எவ்வாறு விளக்கியுள்ளார் ?

3. 'மேற்குலத்தார்' என்றும் 'தீண்ட வொண்ணாதார்' என்றும் புத்தர் எவரைக் குறிப்பிடுகிறார் ?

4. புத்தரின் தளர்ச்சி எவ்வாறு நீங்கியது ?

**எ. மொழித்திறன் வளர்பணி**

**கீழ் உள்ள சொற்களுக்கு இருபொருள் கூறித் தனித்தனி வாக்கியத்தில் அமைக்க :**

ஆடு - வெள்ளாடு - ஆடுதல்

எடுத்துக்காட்டு :

ஆடு - தாளத்துக்குத் தக்கவாறு ஆடு .

ஆடு - எங்கள் வீட்டில் இரண்டு ஆடுகள் உள்ளன .

@KTBS NOT TO BE REPUBLISHED

1) 1. கலம் 2. ஓடு 3. நாடு 4. கலை

2) 1. படி 2. தட்டு 3. ஆடை 4. பாவை

3) 1. அரி 2. ஓலை 3. குடி 4. காடு

**ஏ). நூல் - என்னும் பொருள் தரும் பல சொற்கள் அறிக :**

ஏடு , ஓலை , சுவடி , தூக்கு , பனுவல் , புத்தகம் .

**ஐ). புத்தக சாலை என்னும் பொருள் தரும் பல சொற்கள் அறிக :**

பண்டாரம் , சரசுவதி பண்டாரம் , புத்தக பண்டாரம் , ஏடகம் , சுவடிச் சாலை , சுவடியகம் , நூலகம் , நூல் நிலையம் .

**ஒ). கீழ்க்காணும் தொடர்களில் ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இடுக .**

1. நெல்லிகாய், தான்றிகாய், கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும் .
2. கலைதுறை, மொழிதுறை, மருத்துவதுறை, இசைதுறை, சமயதுறை ஆகியவற்றிற்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணிபெரிது அன்றோ !
3. ஏட்டு சுவடிகளில், சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப் பட்டுள்ளன .

**ஓ). விழுமிய கல்வி :**

சமுதாயத்தில் ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், அறிவாளி, முட்டாள் என்கின்ற சமுதாய சிக்கல்கள் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதை போக்க மனிதர்கள் மனங்களில் கறை படிந்துள்ள கீழ்மை குணங்களை நீக்கி வளமான மனதினை பெறவேண்டுமெனில் நற்கல்வியை பெறவேண்டும். கல்வியே மனிதர்களை மாக்களில் இருந்து வேறுபடுத்தும் சிறந்த எண்ணம் படைத்த புத்தரே இதனை உணர்ந்து உலக சமுதாயம் உயர பாடம் படைத்தார். அவைகளை போதனைகள் மூலம் நமக்குக் கொடையாக அளித்துச் சென்றார் .

❊ ❊ ❊

©KTBS NOT TO BE REPUBLISHED

## பாடம் 17

# நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர்

## சுப்பிரமணியன் சந்திரசேகர்

" அரிது அரிது மானிடராய்ப் பிறதல் அரிது " என்ற ஔவையாரின் கூற்றின்படி அரிய பிறவியாம் மானிடராய்ப் பிறந்து பாரதத் தாயின் புகழை உலக அரங்கிலே உயர்த்தியத் தமிழர் அறிவியலறிஞர் சுப்பிரமணியன் சந்திரசேகர் .

" தமிழன் என்று சொல்லடா !

தலை நிமிர்ந்து நில்லடா ! "

என்ற நாமக்கல் கவிஞரின் கனவை நனவாக்கி இயற்பியலுக்கான நோபல் பரிசை இவர் 1983 ல் பெற்றார். 1930 ல் நோபல் பரிசைப் பெற்ற முதல் தமிழரான சர். சி. வி. இராமனுக்கு இவர் நெருங்கிய உறவினர் .



இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து தற்போது பாக்கிஸ்தானிலுள்ள லாகூர் நகரில் சுப்பிரமணியன் சந்திரசேகர் பிறந்தார். இவரது குடும்பம் அடிப்படையில் தஞ்சாவூரைச் சேர்ந்த குடும்பமாகும் .

வடமேற்கு இரயில் கோட்டத்தின் துணைத் தணிக்கை அதிகாரியாகப் பணியாற்றி வந்த சந்திரசேகர ஐயருக்கும் சீதாலக்குமி அம்மாளுக்கும் 1910 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாள் பிறந்தார் .

சுப்பிரமணியன் சந்திரசேகர் தம் தொடக்கக் கல்வியை வீட்டிலேயே பயின்றார். தந்தை சென்னைக்கு மாற்றலாகி வந்ததும் திருவல்லிக்கேணியில் உள்ள இந்து உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்து வந்தார். கணிதத்தில் மிக்கத் திறமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். மேலும் வியக்கத்தக்க நினைவாற்றலையும் பெற்றிருந்தார் .

© TTES NOT TO BE REPUBLISHED

1925 ஆம் ஆண்டு மாநிலக் கல்லூரியில் சேர்ந்து இயற்பியலைத் தன் விருப்பப் பாடமாகத் தேர்வு செய்து படித்து வந்தார். 1928 ல் அர்னோல்ட் சம்மர் ஃபெல்ட் இந்தியாவிற்கு வந்தார். அவர் ஆற்றிய சொற்பொழிவைச் சந்திரசேகர் கேட்டார். அவரைச் சந்தித்து இயற்பியலில் நடந்துவந்த புதிய ஆய்வுகளைப் பற்றிக் கேட்டறிந்தார். அவற்றைப் பற்றிய புத்தகங்களைப் படித்து தன் முதல் ஆய்வுக் கட்டுரையான ‘ நட்சத்திரங்களின் அமைப்பு’ என்ற நூலைப் பதிப்பித்தார். சென்னையில் நடந்த இந்திய அறிவியல் அறிஞர்களின் மாநாட்டில் தமது கட்டுரையைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார். பல மூத்த அறிவியல் அறிஞர்களின் பாராட்டையும் புகழையும் பெற்றார். தனது 19 வது வயதில் மேலும் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளைப் பதிப்பித்தார். 1930 ல் சுப்பிரமணியன் சந்திரசேகர் தனது பட்டப்படிப்பை முடித்தார் .

இந்திய அரசாங்கம் வழங்கிய மாணவர் உதவித் தொகையைப் பெற்று இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆய்வு மாணவரானார். 1931 ல் இராயல் விண்மீன் ஆய்வு அமைப்பின் கலந்துரையாடல்களில் பங்கேற்று தம்முடைய கட்டுரைகளை விளக்கினார். 1933 ஆம் ஆண்டு தன் ஆய்வு நிறைவுப் பட்டம் பெற்றார் .

1936 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் லலிதா துரைசாமி என்பவரை மணம் முடித்தார். தனது வாழ்க்கை வரலாற்று நூலில் " தன் துணைவியாரின் சகிப்புத் தன்மையும், ஊக்கமும், உறுதுணையும்தான் என் சாதனைக்குக் காரணம் " எனக் குறிப்பிட்டுள்ளார் .



© KTBS NOT TO BE REPUBLISHED

பல ஆய்வுகளுக்குப் பிறகு தன் 63 வது அகவையில் " கருப்பு வெளி" பற்றி முன்பு நடத்திய ஆய்விற்கு மாறான திசையிலிருந்து ஆய்வைத் துவக்கினார். உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஆய்வை மேற்கொண்டு " கருப்பு வெளி பற்றிய கணிதத் தத்துவம் " என்ற நூலை வெளியிட்டார் .

சந்திரசேகரின் இயற்பியல் ஆய்வுகளுக்குப் பல்வேறு விருதுகள் கிடைத்தன. அவற்றில் சில , புரூஸ் பதக்கம் ( 1953 ); பொற்பதக்கம் (1953 ) ; ஆதாம் பரிசு ( 1957) ; இராயல் பதக்கம் ( 1962 ) ; தேசிய அறிவியல் பதக்கம் ( 1967 ) ; பத்ம விபூஷண் ( 1968 ) ; ஹென்றி ட்ரேபர் பதக்கம் ( 1971 ) ; காப்ளே பதக்கம் ( 1984 ) .

இவை எல்லாவற்றிற்கும் கலசம் வைத்தார் போன்று விண்மீன்களின் மண்டலத்தில் ' வெள்ளைக் குள்ளர்கள் ' என்றழைக்கப்படும் ஒரு விண்வெளி அமைப்பைப் பற்றி ஆய்வு செய்து வெளியிட்ட ஒரு வானவியல் கண்டுபிடிப்பிற்காக 1983 ஆம் ஆண்டில் இயற்பியல் பிரிவில் உலகின் மிக உயரிய விருதான நோபல் பரிசைப் பெற்றார் .

@KTBS
NOT TO BE REPUBLISHED

சந்திரசேகர் எழுதிய நூல்களில் சில :

* விண்மீன்களின் அமைப்பின் ஆய்விற்கான முன்னுரை .
* விண்மீன்களின் இயக்கவியல் பற்றிய கோட்பாடுகள் .
* கதிரியக்க மாற்றம் .
* நீர்ம இயக்கவியல், நீர்ம காந்தவியல் நிலைப்புத் தன்மை .
* சம நிலையின் நீள்வட்ட வடிவங்கள் .
* கருந்துளைகளுக்கான கணிதக் கோட்பாடு ஆகியவை .

இப்படிப்பட்ட மாமேதை தன்னுடைய 85 வது வயதில் சிகாகோ நகரில் 1995 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் நாள் மாரடைப்பால் காலமானர். அவரின் கண்டுபிடிப்பு இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது .

* **அருஞ்சொற் பொருள் :**

கூற்றின்படி - வாக்கின்படி, சொற்படி ; உறவினர் - சொந்தக்காரர்; பயின்றார் - படித்தார், கற்றார் ; நூல்களை - புத்தகங்களை ; அகவை - வயது ; பதிப்பித்தார் - வெளியிட்டார் ; ஆய்வு - சோதனை ; திகழ்ந்தார் - விளங்கினார்; நிகழக்கூடிய - ஏற்படக்கூடிய .

## பயிற்சி

* **சொல்லாட்சித் திறன் :**

**அ. கீழுள்ள சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

1. பணியாற்றி, 2. திகழ்ந்தார், 3. துவக்கினார் .

**ஆ. பிரித்து எழுதுக :**

1. பணியாற்றி =
2. நினைவாற்றல் =
3. எழுதியுள்ளார் =
4. கலந்துரையாடல் =

**இ. சேர்த்து எழுதுக :**

1. வந்து + இருந்தபோது =
2. துணை + தணிக்கை =
3. மாற்றல் + ஆகி =
4. பெற்று + இருந்தார் =

@KTBS
NOT TO BE REPUBLISHED

**ஈ). கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்கள் கொண்டு நிரப்புக :**

1. அரிது அரிது ________ பிறத்தல் அரிது .
2. தமிழன் என்று சொல்லடா தலை _______ நில்லடா .
3. சுப்பிரமணியன் சந்திரசேகரின் தாயார் _______ .
4. சுப்பிரமணியன் சந்திரசேகர் தன் ஆய்வு நிறைவுப் பட்டத்தை ________ ஆம் ஆண்டு பெற்றார் .
5. 1968 ல் சுப்பிரமணியன் சந்திரசேகருக்குக் கிடைத்த விருது _____.

**உ. வாய்மொழி வினாக்கள் :**

1. லாகூர் எங்குள்ளது ?
2. வடமேற்கு இரயில் கோட்டத்தில் சந்திரசேகர ஐயர் ஆற்றி வந்த பணி யாது ?
3. சுப்பிரமணியன் சந்திரசேகரின் மனைவியின் பெயர் யாது ?
4. சுப்பிரமணியன் சந்திரசேகர் பதிப்பித்த முதல் கட்டுரை எது ?
5. 1967 ல் கிடைத்த விருது எது ?

**ஊ. மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் விடையளிக்க :**

1. சுப்பிரமணியன் சந்திரசேகரின் இளமைப் பருவத்தைப் பற்றி எழுதுக ?
2. சுப்பிரமணியன் சந்திரசேகருக்கு எதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது ?
3. தன் வாழ்க்கை வரலாற்றில் தனது மனைவியைப் பற்றி என்ன குறிப்பிட்டுள்ளார் ?
4. சந்திரசேகர் எழுதிய நூல்களில் மூன்றைக் குறிப்பிடுக ?
5. சுப்பிரமணியன் சந்திரசேகர் எப்போது காலமானார் ?

©KTBS NOT TO BE REPUBLISHED

6. சந்திரசேகர் பெற்ற விருதுகளில் சிலவற்றைக் குறிப்பிடுக ?

**திறன்வளர் தொடர்பணி ( செயல்கள் )**

**எ. 1. பல்வேறு துறைகளில் நோபல் பரிசு பெற்ற இந்தியர்களின் பெயர்களைக் கேட்டறிந்து பட்டியல் செய்க .**

**ஏ. வார்த்தை விளையாட்டு :**

ஒரு சொல்லில் உள்ள ஏதாவது ஒரு எழுத்தைப் பயன்படுத்தி வேறு சொல்லை எழுதி விளையாடி மதிப்பெண் வழங்குக .




**ஐ. புதிய சொற்களை உருவாக்குக :**

| விண் மீன்கள் | விண் | கண் | மீன் |
|---|---|---|---|
| 1. கப்பல் | _____ | _____ | _____ |
| 2. புதையல் | _____ | _____ | _____ |
| 3. பலகை | _____ | _____ | _____ |

@KTBS NOT TO BE REPUBLISHED

# இலக்கணம்

## அணி

### ( உவமை, உருவகம் )

அணி என்றால் அழகு என்றும் அணிகலன் என்றும் பொருள்படும் .

**செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகு செய்வது அணி எனப்படும்.**

ஒரே தன்மை கொண்ட இருபொருளை ஒப்பிட்டுக் கூறும்போது உவமைக்கும் பொருளுக்கும் இடையே உவம உருபு வெளிப்படையாக வருமானால் அது உவமையணி எனப்படும் .

**எடுத்துக்காட்டு :**

நிலா போன்ற முகம்

தேன் போன்ற மொழி

**உவமையையும் பொருளையும் வேறுபாடு இல்லாமல் சேர்த்துக் கூறுவது உருவக அணி எனப்படும்.**

**எடுத்துக்காட்டு :**

முகத்தாமரை ( முகமாகிய தாமரை )

தமிழ்த்தேன் ( தமிழாகிய தேன் )

மதிமுகம் - மதி போன்ற முகம்

மதி - உவமை , முகம் உவமேயம் ஆகும் .

**மதிமுகம் - முகமதி**

முகமதி எனும் தொடரில் முகமே மதியாகப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. முகம்வேறு, மதிவேறு என வேறுபாடில்லாமல் உள்ளது. இவ்வாறு உவமையையும் **பொருளையும் வேறுபாடு இல்லாமல் சேர்த்துக் கூறுவது உருவகம் எனப்படும். உருவகத்தில் உவமேயம் முன்னும் உவமானம் பின்னுமாக அமைந்திருப்பதை காண்க :**

@TNTBS NOT TO BE REPUBLISHED

எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| **உவமை** | **-** | **உருவகம்** |
| தாமரை முகம் | - | முகத்தாமரை |
| பவள வாய் | - | வாய்ப்பவளம் |
| தேன் மொழி | - | மொழித்தேன் |
| மலரடி | - | அடிமலர் |
| முத்துப் பல் | - | பல்முத்து |
| குவளைக்கண் | - | கண்குவளை |

**வினாக்கள் :**

1. அணி - பொருள் தருக.
2. அணி என்றால் என்ன ?
3. அணிக்கு வடமொழி சொல் எது ?
4. உவமை அணி என்றால் என்ன ?
5. உருவக அணி என்றால் என்ன ?
6. தாமரை முகம் - இதில் உவமை, உருவகம் கூறுக.

❊ ❊ ❊

© KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 18

C3Z1G7

# அபிராமி அந்தாதி ( மனப்பாடம் )

இமயமலையில் தோன்றிய அபிராமி தேவியின் படம்



**நின்றும் இருந்தும் கிடந்தும்**
**நடந்தும் நினைப்ப(து) உன்னை**
**என்றும் வணங்குவ(து) உன்மலர்த்**
**தாள் எழு தாமரையின்**
**ஒன்றும் அரும் பொருளே அரு**
**ளே உமை யே இமயத்(து)**
**அன்றும் பிறந்தவளே அழி**
**யா முத்தி ஆனந்த மே .**

**- அபிராமி பட்டர் .**

## ஆசிரியர் குறிப்பு :

சோழவள நாட்டில், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கடவூரில் ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முன்னர், அந்தணர் மரபில் தோன்றியவர் அபிராமி பட்டர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. ஆயினும் தலைமுறை தலைமுறையாக வந்த இசைக்கலையிலே வல்லவராய் அம்பிகையின் சக்தி வணக்கத்தில் கருத்தொன்றி நின்ற இவரை அத்திருத்தலத்தில் வாழும் அம்பிகையின் திரு நாமத்தைச் சேர்த்து அபிராமிபட்டர் என வழங்கியது மிகவும் பொருந்துவதாகும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**கருத்துரை :**

எழுதப்படாமல் காதில் வழியாகவே கேட்டுக் கற்கப்படும் பெருமை வாய்ந்த வேதத்தின் முடிவிற் பொருந்திய பொருளே ! அருளே உருவான அபிராமியே ! உமையை ! இமயமலையில் அக்காலத்தில் பிறந்தவளே! அழியாத முக்தி ஆனந்தமாக விளங்குபவளே ! நான் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், எந்நிலையில் இருந்தாலும் நின்னையே தியானிக்கின்றேன். உனது மலர் போன்ற பாதங்களையே வணங்குகின்றேன் .

**அ. அருஞ்சொற்பொருள் படிக்க :**

மலர்தாள் - பூ போன்ற பாதங்கள் ; மறை - வேதம் ; உமையே - அன்னையே ; முத்தி - முக்தி .

@KTBS NOT TO BE REPUBLISHED

**பயிற்சி**

**ஆ. கீழ்கண்ட வினாக்கருக்கு விடை தருக :**

1. அபிராமி தேவி எங்கு பிறந்தவர் என்று ஆசிரியர் கூறுகிறார் ?
2. தேவியின் பாதங்களை எதற்கு ஒப்பிட்டு பாடுகிறார் ?
3. அபிராமி தேவியை எந்தெந்த நிலையில் இருந்து தியானிப்பதாக கூறுகிறார் ?
4. அபிராமி பட்டர் எங்கு, எப்பொழுது தோன்றினார் ?

**இ. விரிவான விடையளி :**

1. ஆசிரியர் அபிராமி தேவியை எவ்வாறு போற்றுகிறார் ?

**ஈ. பிரித்து எழுதுக :**

1. இசைக்கலை =
2. அக்காலம் =
3. எந்நிலையில் =
4. கருத்தொன்றி =

**உ. எதிர்ச் சொல் தருக :**

1. நின்ற ×
2. நினைப்பது ×
3. அன்றும் ×
4. ஆனந்தம் ×

**ஊ. இடம் சுட்டி விளக்குக :**

" இமயத்து அன்றும் பிறந்தவளே
அழியா முத்தி ஆனந்தமே ".

**எ. படித்து அறிய :**

வேப்பிலையைத் தின்னலாம் ;
விரும்பித் துளசி தின்னலாம் ;
காப்பதவையே உடல் நலம்
கருதித் தின்றால் கெடலில்லை !
பாகற்காயோ கசப்புத்தான் ;
பழகிப் போனால் சுவைப்பு தான் !
நாவுக்காக வாழாமை
நலத்துக் கான வாழ்வாமே !
சோற்றுக்காக வாழ்வதோ ?
சுவையைக் கருதி வாழ்வதோ ?
கூற்றை வெல்லும் ஆற்றலைக்
கொள்ளலாகும் நா காத்தலால் !
நாவுச் சுவையை விரும்புதல்
நாளும் நோய்க்கே விரும்புதல்
கூவி மகிழ வேண்டினால்
கொஞ்சம் அடக்கு நாவையே !

**- இரா. இளங்குமரன் .**

❊ ❊ ❊

© KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 19

# அழகிய நகரில் ஒரு நாள் - பாரீஸ்

## ( பயணக் கட்டுரை )

- குமரி அனந்தன் .




பிரான்சு வரைபடம்

பிள்ளைகள் பெற்றோரிடமிருந்தும் கற்றோரிடமிருந்தும் அனுபவத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்கிறார்கள் இவற்றோடு உலகின் மற்ற பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன. எனவே சுற்றுப் பயணம் அவசியம். அதில் பெற்றதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறது இப்பாடம் .

@KTBS NOT TO BE REPUBLISHED

ஐரோப்பா கண்டத்தில் உள்ள பிரான்சு தலைநகரம் பாரீஸ். உலகிலேயே அழகிய நகரம் என்று பேசப்படும் பாரீஸ் ஈபிள் கோபுரம் ( Eiffel tower ) அமைந்துள்ள இடம். இந்த கோபுரம் 1889 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்தக் கட்டிடக்கலையை வடிவமைத்தவர் பெயர் கஸ்டனே ஈபிள். இதன் உயரம் 324 மீட்டர். இதில் மூன்று அடுக்குகள் உள்ளன. முதல் இரண்டு அடுக்குகளில் உணவு விடுதிகள் உண்டு .



உலக அளவில் இன்றளவும் போற்றப்படும் ஓவியமாக விளங்கும் ' மோனலிசா ' உருவப்படம் பாரீஸில் உள்ள லவ்ரே என்ற அருங்காட்சியகத்தில் இருக்கிறது. இவ் ஓவியத்தை 1519 ஆம் ஆண்டு லியோன டோ டாவின்சி என்ற ஓவியர் வரைந்தார்.



இவ்ஓவியத்திற்கு முகத்தில் புருவம் கிடையாது. இந்த ஓவியத்தில் உள்ள பெண்ணின் உதடுகளில் தவழும் லேசான மர்மப் புன்னகை குறித்து கலையுலகில் இன்றளவும் விவாதங்கள் தொடருகின்றன. அமெரிக்காவைச் சேர்ந்த ரோன்பிக்கிரில்லோ என்ற ஓவியர் இவ் வோவியத்தை ஒரு புறமாகச் சாய்த்துத் திருப்பி பார்த்தால் மூன்று மிருகங்களின் உருவங்கள் மறைந்திருப்பது தெரிவதாகக் கூறியுள்ளார். ஓவியத்தின் வலது மேல் புறத்தில் சிங்கம், இடது புறம் வாலில்லாக்குரங்கு, வலது கீழ்ப்புறம் எருமை ஆகிய வடிவங்கள் காணப்படுவதாக ஓவியர் ரோன் கூறியுள்ளார். அந்த முகத்தில் ஏற்படும் வெளிச்சம் அந்தக் கண்கள் எந்தத் திசையிலிருந்து பார்த்தாலும் நம்மை நோக்குவது போன்ற பிரம்மை. வரைந்த நாளிலிருந்து மிகவும் புகழ் பெற்ற படமாக உலகெங்கும் காட்சியளிப்பது இப்படத்தின் நகல்கள் .

**உழைப்பால் உயர்வு :** இங்குள்ள மக்கள் உழைத்து நல்ல பணம் சம்பாதிக்கிறார்கள். தெருக்கூட்டும் வேலையைச் செய்தாலும் அதைக் கேவலமாக நினைப்பதில்லை .

**" யாதானும் தொழில் புரிவோம்**

**யாவும் அவன் தொழில் "**

என்ற பாரதியின் பாட்டு இங்கு செயல் வடிவம் பெறுகிறது. எந்த வேலையாக இருந்தாலும் ஒரு நபருக்குக் குறைந்தபட்சம் எட்டாயிரம் ராங்கு கொடுத்தாக வேண்டும் என்பது சட்டம். இங்கெல்லாம் எந்தத் தொழிலுக்கும் பயிற்சி உண்டு. முடிதிருத்துவது, துணி வெளுப்பது, சுவரொட்டி ஒட்டுவது, ஒலி பெருக்கி வைப்பது போன்றவற்றில் பயிற்சி பெற்றவர்களே அத்தொழிலில் ஈடுபடமுடியும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**மாண்ட் மேட்ரே :** பழனியில் அமைந்திருப்பது போல் மலை. ஒரு சிறிய குன்றின் மேல் புனித இருதய ஆலயம் இருக்கிறது. ( Basilica Of The Sacred Heart) இங்கு தான் கிறிஸ்துவ மதத்தைப் பரப்பத் துணிந்த பலரும் உயிர் நீத்துத் தியாகம் செய்தார்கள். எனவே இந்தக் குன்று மீதே " மாண்ட் மேட்ரே " என்ற ஆலயத்தைக் கட்டியுள்ளார்கள் .

**நிழற்கலை :** ஓர் அருமையான கலை நிகழ்ச்சிக்குச் சென்றோம். மேடையில் வெள்ளைத்துணி, அதாவது திரை அதற்கு முன் ஒருவர் நின்று கொண்டு தனது விரல்களைப் பல்வேறு வகைகளில் வளைத்தும், நிமிர்த்தியும், குவித்தும், நீட்டியும் இரு கைகளின் துணை கொண்டு நிழல்களை மேடைத்திரையில் விழச்செய்தார். முதலில் வந்தது மீன், பிறகு ஆடு, பாம்பு, பட்டாம் பூச்சி, ஒட்டகச் சிவிங்கி போன்ற உருவங்களைக் கண்டோம் .



விடுமுறையைக் கழிப்பதில இவர்களுக்கு ஆர்வம் அதிகம். வெள்ளிக்கிழமை பிற்பகலிலிருந்தே அதைப் பற்றிய சிந்தனைகளையும், திங்கட்கிழமை முற்பகல் அதே போல் கடந்தவற்றையும், நடந்தவற்றையும் பற்றிய சிந்தனையில் கழியுமாம். தவிர மற்ற நேரங்களில் வேலையில் மட்டுமே கவனம், கடுமையான, உண்மையான உழைப்பு .

தமிழர்கள் முப்பதாயிரத்துக்கும் மேலே இங்கு வாழ்கிறார்கள். இலங்கைத்தமிழர்கள் அண்மைக் காலத்திலிருந்து வாழ்ந்து வருகிறார்கள். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்குப் பதிலாக,

©KTBS
NOT TO BE REPUBLISHED

ஒற்றுமையில் வேற்றுமை கண்டு வாழ்கிறார்கள். பெரும்பாலோர் இலங்கைத் தமிழர்களில் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஒற்றுமையும் ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையும் இருக்கிறது. தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் மறந்து போகக்கூடாது என்பதற்காகத் தமிழ் பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். அங்கே பிரெஞ்சு மொழியும் கற்றுக் கொடுக்கிறார்கள் .

**பிறந்தால் பணம் :** இங்கு ஒரு குழந்தைக்கு மூன்று ஆண்டுகளுக்கு, மாதம் எண்ணூறு ப்ராங் அளவிற்கு உதவித்தொகை கிடைக்கிறது. அவ்வாறு எத்தனை குழந்தைகள் பெற்றாலும் கிடைக்கும். ஆப்ரிக்கா தேசத்தில் இருந்து வந்தவர்கள், அல்ஜீரியாவிலிருந்து வந்தவர்கள், ஆசியாவிலிருந்து வந்தவர்கள்தான் இந்த உதவித்தொகை பலனை அதிகமாகப் பெறுகிறார்கள். குழந்தைகள் நல்ல முறையில் வளர வேண்டும் என்பதில் அரசாங்கம் எவ்வளவு அக்கறை காட்டுகின்றன என்பதை நாம் இதன் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது .

## நூல் குறிப்பு :

குமரி அனந்தன் என்பவர் உலகத்தின் பல நாடுகளில் பயணம் செய்து தம் அனுபவத்தையும் நெஞ்சிலே பதித்துக் கொண்டவைகளையும் நமக்கு எடுத்துரைக்கிறார். இப்பகுதியை " உலகில் பார்த்ததும் உள்ளத்தில் பதித்ததும்" என்ற புத்தகத்தில் வடிவமைத்துள்ளார் .

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

## அருஞ்சொற் பொருள் :

பிரம்மை - மாயத் தோற்றம் ; நகல்கள் - மறுபிரதி ; விந்தனை - யோசனை ; கேவலம் - இழிவு ; அருங்காட்சியகம் - அரிய பொருட்களை திரட்டி அனைவரும் காண வகை செய்யும் இடம் ; ப்ராங் - பிரான்ஸ் தேசத்தின் நாணயம் .

**பாடப் பொருள் பயிற்சி :**

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. மோனோலிசா ஓவியத்திற்கு முகத்தில் __________ கிடையாது .
2. மோனோலிசா உருவப்படம் ___________ என்ற அருங்காட்சியகத்தில் உள்ளது .

3. அங்கு ஒரு நபருக்குக் குறைந்த பட்சம் ______ வேலை ஊதியமாகக் கொடுக்க வேண்டும் .

4. நிழற்கலை மூலம் _____, _____, _____ உருவங்களைத் திரையில் கண்டோம் .

**ஆ. ‘ அ ’ வில் கொடுக்கப்பட்டுள்ள வேலைப்பாடுகளைச் செய்பவர்களை ‘ ஆ ’ வுடன் பொருத்துக :**

| அ | ஆ |
|---|---|
| மரவேலை | குயவர் |
| மண்பாண்டம் | கொல்லர் |
| துணி நெய்பவர் | தச்சர் |
| கட்டட வேலை | தட்டான் |
| தங்க வேலை | நெசவாளர் |
| படம் வரைபவர் | வண்ணான் |
| துணி வெளுப்பவர் | ஓவியர் |
| இரும்பு வேலை | கொத்தனார் . |

**இ. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :**

1. கை விரல்களை மடக்கியும், நீட்டியும் பல உருவங்களை திரையில் விழச் செய்தனர் .

2. தமிழ்ப் பள்ளிக் கூடம் நடத்துகிறார்கள் .

**ஈ. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1. உலகிலேயே அழகிய நகரம் எது ?

2. புகழ் பெற்ற படமாக காட்சியளிப்பது எது ?

3. மோனோலிசா ஓவியத்தில் உள்ள பிரம்மை யாது ?

4. இங்கு யாருடைய பாடல் செயல்வடிவம் பெறுகிறது ?

5. தொழிலாளர்களுக்கு ப்ரான்ஸில் கொடுக்கும் குறைந்த பட்ச ஊதியத் தொகை எவ்வளவு ?

@KTBS NOT TO BE REPUBLISHED

உ. நான்கு அல்லது ஐந்து வரிகளில் விடை தருக :

1. மோனோலிசா உருவப்படத்தை யார் எப்போது வரைந்தார் ? விளக்குக :
2. நிழற்கலை என்றால் என்ன ? அதன் மூலம் காணப்படும் சில உருவங்களை எழுதுக ?
3. பிரான்சு நாட்டு மக்கள் விடுமுறையை எவ்வாறு கழிக்கின்றனர்?
4. பிரான்ச் அரசாங்கம் குழந்தைகள் மீது எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதை விளக்குக ?
5. சிறுகுறிப்பு வரைக : பாரீஸ் , மாண்ட் மேட்ரே .

**மொழிப் பயிற்சி**

**ஊ. சேர்த்து எழுதுக :**

| | | | |
|---|---|---|---|
| மர்மம் | + | புன்னகை | = |
| இன்று | + | அளவும் | = |
| மறைந்து | + | இருப்பது | = |
| காட்சி | + | அளிப்பது | = |
| முடி | + | திருத்துவது | = |

**எ. பிரித்து எழுதுக :**

சுற்றுப்பயணம் =

அருங்காட்சி =

உருவப்படம் =

உலகளவில் =

கலையுலகில் =

**ஏ. கோடிட்ட தொடர்களை எதிர்ப்பொருள் தரும்படி மாற்றி எழுதுக :**

1. பாரதியின் பாட்டு செயல் வடிவம் பெறவில்லை .
2. பயிற்சி பெற்றவர்கள் தொழிலில் ஈடுபட முடியும் .
3. விடுமுறையைக் கழிப்பதில் ஆர்வம் அதிகம் இல்லை .

©KTBS NOT TO BE REPUBLISHED

4. இங்குள்ள மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வாழ்கிறார்கள்.

5. இவர்கள் வேலையில் அதிக கவனம் செலுத்தமாட்டார்கள் .

6. கிறிஸ்துவ மதத்தைப் பரப்பத் துணிந்த சிலர் உயிர்த் தியாகம் செய்யவில்லை .

**ஐ. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

விவாதங்கள், புகழ் பெற்ற, உழைத்து, விடுமுறை, அக்கறை .

**ஒ. முறைமாறிக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை சரியாக அமைத்து வாக்கியமாக்குக :**

1. ஒரு கலை நிகழ்ச்சிக்கு அருமையான சென்றோம் .
2. பிற்பகலிலிருந்தே வெள்ளிக்கிழமை அதைப் பற்றிய சிந்தனை .
3. நல்ல மக்கள் சம்பாதித்திருக்கிறார்கள் இங்குள்ள பணம் உழைத்து.

**ஓ. செயல் பாடுகள் :**

1. உலக அதிசயங்கள் எத்தனை ? அவைகளின் படங்களைச் சேகரித்து ஒட்டவும் .
2. அருகில் உள்ள அருங்காட்சியகம் சென்று பார்க்க, பார்த்தவற்றை விவரித்து எழுதுக .
3. கடிதம் வரைதல் :

குடி நீர் வேண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக . கீழ்க்காணும் சொற்களை தேவையான இடங்களில் பயன்படுத்துக.

( வணக்கம் , நன்றி , தயவு , அனுமதி தாருங்கள் , வேண்டுகிறேன் , பணிவான ) .

@KTBS NOT TO BE REPUBLISHED

**சொல்லாட்சி திறன்**

**4. கட்டுரை எழுதும் பயிற்சி :**

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து

எழுதி கட்டுரையை பூர்த்தி செய்க :

மலையடிக் ____________ ஒரு சிற்றூர், அதன் பக்கத்தில் ஓர் அடர்ந்த ____________ இருந்தது, அவ்வூரில் ____________ என்னும் பெயருடைய ஒருவன் ____________ வந்தான். அவன் தன் ஊருக்குப் பக்கத்தில் உள்ள ____________ சென்று ____________ பொறுக்குவான். அதை விற்றுப் ____________ பெற்று, அதைக் கொண்டு தன் ____________ நடத்தி வந்தான். அவன் ____________ இருந்தாலும் மிகவும் ____________ . எல்லா ____________ இரக்கம் ____________ தம்மால் ____________ யைச் செய்வான் .

[ காட்டுவான், உதவி, குறிச்சி, வாழ்ந்து, காட்டுக்குச், விறகு, வாழ்வை, நல்லவன், காடு, நாள்தோறும், முடிந்த, பொருள், முருகன், ஏழையாக, உயிர்களிடத்திலும் . ]

**5. வாழ்க்கைத் திறன் .**

1. இங்கு கொடுக்கப்பட்டுள்ள நிழற்கலைகளை செய்து பழகு .



@KTBS NOT TO BE REPUBLISHED

2. உன் வீட்டில் நடக்கும் புதுமனை புகு விழாவிற்கு உம் நண்பன் மற்றும் அவருடைய பெற்றோரையும் தொலைபேசியில் பேசி அழைக்க வேண்டும். எவ்வாறு தொலைபேசியில் உரையாடுவீர்கள் **என்பதை பேசிக் காட்டுக.**

**6. விழுமிய கல்வி : உயிர் இரக்கம்**

1. தெருவில் ஒரு நாய் அடிப்பட்டுக் கிடக்கிறது, **நீங்கள்** அதற்கு என்ன **செய்வீர்கள் ?**

1. பார்க்காமல் சென்று விடுவேன் .
2. முதல் உதவி செய்வேன் .
3. பிராணிகளின் தொண்டு நிறுவனத்திற்கு தொலைபேசியில் தெரிவிப்பேன் .

## தெரிந்துக் கொள்க :

சில நாடுகளும் அவற்றின் புழக்கத்தில் உள்ள நாணயத்தின் பெயர் .

@KTBS NOT TO BE REPUBLISHED

| நாடு | நாணயத்தின் பெயர் |
|---|---|
| 1. ஆஸ்திரேலியா | ஆஸ்திரேலியன் டாலர் |
| 2. வங்காள தேசம் | டாகா |
| 3. இந்தியா | ரூபாய் |
| 4. ஜப்பான் | யென் |
| 5. பாகிஸ்தான் | பாகிஸ்தான் ரூபாய் |
| 6. சவுதி அரேபியா | சவுதி ரியால் |
| 7. ரஷ்யா | ரௌபல் |
| 8. சிங்கப்பூர் | சிங்கப்பூர் டாலர் |
| 9. இலங்கை | ஸ்ரீ லங்கா ரூபாய் |
| 10. இங்கிலாந்து | பவுன்ட் ஸ்டெர்லிங் |
| 11. அமெரிக்கா | யு. எஸ். டாலர் |
| 12. ஐரோப்பா | யூரோ |

உமக்கு தெரிந்த பிற நாடுகளின் பெயர்களையும் அவற்றின் நாணயங்களையும் சேகரிக்கவும்.

✤ ✤ ✤

# இலக்கணம்

## இணைச்சொற்கள்

அகமும் புறமும்
அகலாமல் அணுகாமல்
அடியும் நுனியும்
அடுப்பும் துடுப்பும்
அருமை பெருமை
அல்லும் பகலும்
அறம் மறம்
அன்றும் இன்றும்
ஆக்கமும் கேடும்
ஆங்காலம் போங்காலம்
ஆடல் பாடல்
ஆண்டான் அடிமை
ஆய்ந்து ஓய்ந்து
இகழ் புகழ்
இம்மை மறுமை
இயலும் செயலும்
இயற்கையும் செயற்கையும்
இளைத்துக் களைத்து
இறங்குபொழுது ஏறுபொழுது
இன்ப துன்பம்
ஈடும் எடுப்பும்
உடை நடை
உயர்வு தாழ்வு

உருட்டும் புரட்டும்
உருண்டு திரண்டு
உருவும் திருவும்
உள்ளது உரியது
உள்ளதும் இல்லதும்
உள்ளும் புறமும்
உற்றார் உறவினர்
ஊரும் பேரும்
எடுப்பாரும் பிடிப்பாரும்
எண்ணும் எழுத்தும்
எருக்குங் குருக்கும்
எலும்பும் தோலும்
ஏழை எளியவர்
ஏற்றடி இறக்கடி
ஒட்டி உலர்ந்து
ஒப்பாரும் மிக்காரும்
ஒப்பு உயர்வு
கட்டை நெட்டை
கண்டது கேட்டது
கண்டுமுட்டு கேட்டுமுட்டு
மண்ணீரும் கம்பலையும்
கப்பும் கவரும்
கல்லும் கரம்பும்

@KTBS
NOT TO BE REPUBLISHED

| | |
|---|---|
| உயிரும் உடலும் | கல்வி கேள்வி |
| கற்பும் பொற்பும் | ஞாயிறுந் திங்களும் |
| கனவோ நனவோ | தடுத்து மடுத்து |
| காவலரும் ஏவலரும் | தடை விடை |
| காவலரும் பாவலரும் | தப்பும் தவறும் |
| காலை மாலை | தாயும் சேயும் |
| கீழும் மேலும் | தும்பு தூசு |
| குடியும் தடியும் | தோட்டம் துரவு |
| குணம் குறி | தோலும் எலும்பும் |
| குலமும் குணமும் | நகமும் சதையும் |
| குறைவு நிறைவு | நகை நட்டு |
| குற்றுயிரும் கொலையுயிரும் | நயமும் பயமும் |
| கேளும் கிளையும் | நரை திரை |
| கையும் மெய்யும் | நலம் பொலம் |
| கொட்டு முழக்கு | நல்லார் பொல்லார் |
| கொண்டு கூட்டு | நன்மை தீமை |
| கொத்தடிமை குடியடிமை | நாடு நகர் |
| கொப்பும் குழையும் | நாயும் பேயும் |
| கொலையும் புலையும் | நாளும் கோளும் |
| சட்டி பானை | நாளுங் கிழமையும் |
| சந்தி சதுக்கம் | நிரந்து கலந்து |
| சாக்குப் போக்கு | நுங்கும் நுரையும் |
| சாவா மூவா | நைந்து பிய்ந்து |
| சீராட்டிப் பாராட்டி | நொண்டி சண்டி |
| சீரும் சிறப்பும் | நோய் நொம்பலம் |

@KTBS
NOT TO BE REPUBLISHED

சீறிச் சினந்து
சுற்றும் முற்றும்
சொல்லும் பொருளும்
பயிர் பச்சை
பருந்தும் நிழலும்
பழக்க வழக்கம்
பாலும் தேனும்
பாவமும் பழியும்
பேரும் புகழும்
பொய்யும் புலையும்
பொய்யும் புனைசுருட்டும்
பொய்யும் வழுவும்
போக்குப் புகழ்
போக்கும் வரவும்
போற்றிப் புகழ்ந்து
மணியும் ஒளியும்
மண்ணும் விண்ணும்
மண் மனை
மந்திர தந்திரம்
மப்பு மந்தாரம்
மயக்கம் தியக்கம்
மலரும் மணமும்
மலைக்கும் மடுவுக்கும்
முட்டி மோதி
முத்தி மோந்து
நோவு நொடி
படியாதார் பண்டிதர்
பட்டி தொட்டி
பண்ணும் இசையும்
வாடி வதங்கி
வாய்க்கால் வரப்பு
வாழ்வு தாழ்வு
வானகமும் வையகமும்
விதி விலக்கு
விருப்பு வெறுப்பு
வினா விடை
வீடும் விளக்கும்
வேரும் தூரும்
முற்ற முடிய
மேடு பள்ளம்
யாழும் குழலும்
வற்றி வறண்டு .

@KTBS
NOT TO BE REPUBLISHED

# பாடம் 20

# பசவண்ணர் வசனம்

## [ மொழிபெயர்ப்புப் பாடல் ]

( மனப்பாடம் 7 வரிகள் )



பசவண்ணர்



NOT TO BE REPUBLISHED

### வசனம்

சாதிபெருமை என்னை விட்டு அகலா விட்டால்
நான் எவ்வாறு ஒருசரணனாக இருக்க முடியும் ?
விதியின் கட்டுகள் என்னை விட்டு அகலாத வரை
நான் எவ்வாறு பந்தனாக இருக்க முடியும் ?
நான் என்னுடைய என்றஅடையாளங்கள் எல்லாம் விட்டுவிட்டு
இழி நிலையிலும் தாழ்ந்த இடத்தை
உனதாக்கிக் கொள்ளவேண்டும் கூடலசங்கம தேவா !

**ஆசிரியர் குறிப்பு :**

12 - ஆம் நூற்றாண்டில் கருநாடகத்தில் வாழ்ந்த வீர சைவத் தொண்டர்களில் தலையாயவர் பசவண்ணர் ஆவார். சமய- சமுதாயப் புரட்சியாளர்களில் முதன்மையானவர். விஜயபுரா மாவட்டத்தின் பசவன பாகேவாடியில் பிறந்தவர். தந்தை மாதிராஜா, தாய் மாதலாம்பிகை ஆவர். பிஜ்ஜள மன்னரிடம் அமைச்சராகப் பணியாற்றியவர். 'கூடல சங்கமம்' என்னுமிடத்தில் உள்ள இறைவனை வழிபட்டவர். தம் பாடல்களில் 'கூடல சங்கம தேவர் ' என்னும் பெயரை ஒவ்வொரு பாடலிலும் மகுடமாக அமைத்துள்ளார். மனிதர்களிடையே பிறப்பை அடிப்படையாகக் கொண்ட பாலினம், சாதிப்பிரிவுகள், செல்வம், வணிகம் ஆகியவற்றின் பெயரில் உண்டாக்கப்படும் பிரிவுகளைப் பசவண்ணர் தனது வசனக் கவிதைகளில் மிகவும் கடுமையாகச் சாடியுள்ளார். இறைவனை வணங்கிக் கொண்டே சாதியைச் சாடியவர் இவர். பசவேசரின் பொன்மொழிகள் எனும் நூலாகத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் திரு. சோமசுந்தர ஐயரும், திரு. வி. இரத்தின சபாபதி அவர்களும் ஆவர். பேராசிரியர் தா. கிருட்டிண மூர்த்தியும் தனியாக மொழியாக்கம் செய்துள்ளார் .

**அ. அருஞ்சொற் பொருள் :**

அகலா - நீங்கா, விலகா ; சரணன் - சிவபெருமான் பக்தர், சிவனடியார்; பந்தன் - உறவினன் ; இழிநிலை - கீழ்நிலை, எல்லாம் இழந்தநிலை .

**கருத்துரை :**

நான் உயர்ந்த சாதியில் பிறந்தவன் என்ற பெருமை என்னைவிட்டு நீங்காவிட்டால், நான் எப்படி ஒரு சிவப்பக்தனாக விளங்க முடியும் ? விதியின் பிணைப்புகள் என்னைவிட்டு நீங்காதவரை நான் எப்படி உறவினனாக இருக்க முடியும்? ' நான் ' உயர்ந்தவன் என்ற எண்ணமும், இவை என்னுடையவை என்ற பற்று போன்ற அடையாளங்களை தவிர்த்த நிலையிலும் நான் தாழ்ந்த இடத்தில் இருக்கும் நிலையிலும், என்னை நீ உனதாக்கிக் கொள்ள வேண்டும் கூடல சங்கம தேவா!

NOT TO BE REPUBLISHED
@KTBS

## இ. எதிர்ச் சொல் தருக :

| | | |
|---|---|---|
| பெருமை | × | |
| முடியும் | × | |
| இழிநிலை | × | |
| தாழ்ந்த | × | |

## ஈ. சேர்த்து எழுதுக :

| | | | | |
|---|---|---|---|---|
| அகலா | + | விட்டால் | = | |
| சரண் | + | ஆக | = | |
| உனது | + | ஆக்கி | = | |

## உ. கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக :

1. எது விலகாதவரை பசவண்ணர் சரணனாக முடியாது என்கிறார்?
2. எந்தக் கட்டுகள் அகலாதவரை பசவண்ணர் பந்தனாக முடியாது என்கிறார் ?
3. பசவண்ணர் எந்த அடையாளங்களை எல்லாம் விடுவதாகக் கூறுகிறார் ?

## ஊ. விரிவான விடையை எழுதுக :

1. பசவண்ணர் இறைவனைப் போற்றி எவ்வாறு பாடியுள்ளார் ?

## எ. செயல்பாடுகள் :

1. செய்தித் தாள்களிலும், சிறுவர்களுக்கான வெளியீடுகளிலும் வரும் செய்திகளைப் படித்து, கத்தரித்து சேமிக்கவும் .
2. ஆண்டு விழா மற்றும் திருமண அழைப்பு இதழ்களைப் படித்தறிக. மாதிரியை தயார் செய்க .

©KTBS NOT TO BE REPUBLISHED

## ஏ. அறிக :

1. தமிழ் அளவை முறைகள் ஏழு வகைப்படும். அவை

   1. எண்ணல்
   2. நிறுத்தல்
   3. முகத்தல்
   4. பெய்தல்
   5. நீட்டல்
   6. தெறித்தல்
   7. சார்த்தல் என்பனவாகும் .

2. மிக அதிக வேகமாக ஓடும் விலங்கினம் யாவை ?

   1. சிறுத்தை 135 கிலோ மீட்டர், 2. மான் 95 கிலோமீட்டர், 3. யானையின் வேகம் அதிகபட்சம் 35 கிலோமீட்டர் .

## ஐ. ணகர, னகர வேறுபாடு :

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆணை | - | கட்டளை |
| | ஆனை | - | யானை |
| 2. | உண் | - | சாப்பிடு |
| | உன் | - | நின் |
| 3. | நாண் | - | வெட்கம் |
| | நான் | - | யான் |
| 4. | மணை | - | ஆசனம் |
| | மனை | - | வீடு |

@KTBS NOT TO BE REPUBLISHED

| | | | |
|---|---|---|---|
| 5. | பணி | - | வேலை |
| | பனி | - | குளிர்ச்சி |
| 6. | வாணம் | - | வெடி |
| | வானம் | - | விண் . |

## ஒ. விழுமிய கல்வி :

பிறப்பால் அனைவரும் சமம் என்பதை உணர வேண்டும். மனிதர்களிடையே சாதி அடையாளங்களை விட்டுவிட்டு, மனிதர்களாக வாழவேண்டும். அதுவே மானிட இனத்தை மேன்மை படுத்தும் என்பதை அறிக .

✤ ✤ ✤

@KTBS
NOT TO BE REPUBLISHED

# பாடம் 21

# விடுதலை வீரன்

## வீரபாண்டிய கட்டபொம்மன்

### நாடகம்

### காட்சி - 1



© KTBS NOT TO BE REPUBLISHED

இடம் : கட்டபொம்மன் அரண்மனை .

பங்கு கொள்வோர் : வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, அமைச்சர், ஆங்கிலத் தூதன் .

வீ. பா.கட்டபொம்மன் : தம்பி, இங்கு வா . . . இரண்டு நாட்களாக உன்னைக் காண வில்லையே. எங்கு சென்றிருந்தாய் ?

ஊமைத்துரை : குதிரைப்படை முகாமில் முக்கியமான பணியில் இருந்தேன், அதனால் தங்களை வந்து காண இயலவில்லை, அண்ணா .

வீ. பா. கட்டபொம்மன் : [ சிரித்துக் கொண்டே ] தெரியும், தெரியும். வீரப்போருக்கு வேட்கை கொண்டவன் என்

தம்பி என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆமாம் செய்தியைக் கேள்விப்பட்டாயா ?

ஊமைத்துரை : என்ன அண்ணா ? ஏதேனும் புதிய செய்தியா?

வீ. பா. கட்டபொம்மன் : பரபரப்பானது ஒன்றுமில்லை. பரங்கியர்கள் வழக்கம்போல் பணம் [ ஏளனமாக . . . ] அதுதான் வரிப்பணம் கேட்டு வந்தார்கள் .

ஊமைத்துரை : யார் வந்தார்கள் அண்ணா ?

வீ. பா. கட்டபொம்மன் : ஆங்கிலத் தூதன் ஆலன் துரை வந்தான். ஆர்க்காட்டு நவாப் என்றான்; அதிகாரம் என்றான்; வரிப்பணம் கேட்டான்; அதற்கு வட்டியும் கேட்டான்; [ சிரித்துக் கொண்டு] என்ன துணிச்சல் இந்த இங்கிலாந்து நரிகளுக்கு?

ஊமைத்துரை : ஆலன் துரை வந்தானா ? [ அமைச்சரை நோக்கி ஆவேசத்துடன் ] அமைச்சரே! என்ன நடந்தது ? விரிவாகக் கூறுங்கள் .

அமைச்சர் : ஆமாம் தம்பி. ஆலன் துரை வந்தான். ஆங்கிலேயர்கள் ஆர்க்காட்டு நவாப்புக்குப் பணம் கொடுத்திருந்தார்களாம். அதை அவரால் திருப்பித்தர இயலவில்லையாம். அதனால் நவாபு தம் ஆளுகைக்கு உட்பட்ட பாளையக்காரர்களிடம் வரிவசூல் செய்து கொள்ளும் உரிமையை ஆங்கிலேயர்களுக்கு அளித்திருக்கிறார்களாம். அந்த உரிமையின் பேரில் நம்மிடம் வரிப் பணம் கேட்டு ஆள் அனுப்பினர் ஆங்கிலேயர்கள் .

ஊமைத்துரை : தாங்கள் என்ன கூறி அனுப்பினீர்கள் அண்ணா ?

வீ. பா. கட்டபொம்மன் : ஆர்க்காட்டு நவாப்பையே ஏற்றுக் கொள்ளாதவன் இந்த கட்டபொம்மன். அவனை

©KTBS NOT TO BE REPUBLISHED

| | | |
|---|---|---|
| | | 3விலைக்கு வாங்கிய ஆங்கிலேயனுக்கா அடிபணிவான் ? அரி விளையாடும் மண் பாஞ்சாலம்பதி. இங்கே ஆங்கில நரி விளையாட முடியாது. விளையாடவும் விட மாட்டேன். வரியாவது ...! வட்டியாவது ...! வந்த வழியே திரும்பிப் போகச்சொல் அவர்களை ... என்று சொல்லி அனுப்பினேன். சரிதானே தம்பி . |
| ஊமைத்துரை | : | சரியாகச் சொன்னீர்கள் அண்ணா. பொருளை விற்க வந்தவனுக்குப் புவியாளும் ஆசை வந்துவிட்டது. வேங்கையின் குகைக்கே வரிகேட்டு வந்தானா ... வீரபாண்டிய கட்டபொம்மன் மண்ணின் வீரம் அறியாதவன். [ வாயிற்காவலன் வருகிறான் ] |
| வாயிற் காவலன் | : | ( வணங்கி நின்று ) மன்னருக்கு என் வணக்கம். ஓலை தாங்கி ஒருவன் வாயிலில் காத்திருக்கிறான். மன்னா . |
| வீ. பா. கட்டபொம்மன் | : | வரச்சொல். [ ஓலை தாங்கி வருகிறான் ] |
| ஓலை தாங்கியவன் | : | ஐயா, நான் ஆங்கில அலுவலர் ஜாக்சன் துரையிடமிருந்து வருகிறேன். இதோ அவரது மடல் [ ஓலைதாங்கி மடலைத் தருகிறான். அமைச்சர் அதைப் பெற்றுக் கொள்கிறார். ] |
| வீ. பா. கட்டபொம்மன் | : | அமைச்சரே ...! மடலைப் பிரித்துப் படியுங்கள். வஞ்சகர்கள் எதற்கு வலைவிரிக்கிறார்கள் என்று பார்ப்போம் . |
| அமைச்சர் | : | [ படிக்கிறார் ] கட்டபொம்மன் அறிவது என்னவென்றால் ... ஆர்க்காட்டு நவாபிடமிருந்து அதிகாரம் பெற்றவர்கள் நாங்கள். அனைத்துப் பாளையக்காரர்களும் என்னைச் சந்தித்து விளக்கம் கேட்டுச் சென்றுள்ளனர். நீர்வராதது மட்டுமின்றி, வரி செலுத்த முடியாது என்று கூறியது வருத்தத்தைத் தருகிறது. யாம் தற்போது திருநெல்வேலியில் |

NOT TO BE REPUBLISHED @KTBS

| | | |
|---|---|---|
| | | முகாமிட்டுள்ளோம். உடனே வந்து எம்மைச் சந்திக்கவும். இப்படிக்கு ஜாக்சன் துரை . |
| ஊமைத்துரை | : | (சினத்துடன் ) இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது அவனிடத்திற்குத் தாங்கள் சென்று பார்ப்பது அவ்வளவாகச் சரியில்லை அண்ணா . |
| வீ. பா. கட்டபொம்மன் | : | தம்பி . . . ஆத்திரப்படாதே, பயப்படுவது தான் பண்பிற்கு இழுக்கு. பகையைத் தனிக்க நேரில் சென்று காண்பதில் தவறு ஒன்றுமில்லை. நம்முடைய முன்னோர்கள் நமக்குக் காட்டிய வழிகள் அவை. பாஞ்சாலங்குறிச்சியின் பாதுகாப்புக்கு ஊறு நிகழாதிருக்க நெல்லைக்குச் செல்வதுதான் நேரியவழி. அமைச்சரே . . .! புறப்பட ஏற்பாடு செய்யுங்கள். |

**காட்சி - 2**



| | | |
|---|---|---|
| இடம் | : | ஜாக்சன் துரையின் முகாமிடம் . |
| பங்குகொள்வோர் | : | வீரபாண்டிய கட்டபொம்மன், ஜாக்சன் துரை. |

NOT TO BE REPUBLISHED @KTBS

ஜாக்சன் : (சினத்துடன்) பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தின் சிற்றரசன் நீர்தானா ?

வீ. பா. கட்டபொம்மன் : துரையவர்களுக்கு ஒரு திருத்தம். வேங்கைகளோடு வீட்டுவாசலில் விளையாடும் வீரக் குழந்தைகள் நிறைந்த பாஞ்சாலம்பதியின் மன்னன். ஆண்டவனைத் தவிர அவனியில் எவர்க்கும் அடிமையல்லோம் என்றார்ப்பரிக்கும் வீரர் கூட்டத்தின் வேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மன் நான் .

ஜாக்சன் : ஓகோ ! விளக்கம் நன்றாக இருக்கிறது. ஆனால் வேந்தனுக்குரிய நாகரிகம் இல்லை உம்மிடம்.

வீ. பா. கட்டபொம்மன் : அடக்கிப் பேசுங்கள். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே கனத்துபுகழோடு தோன்றிய குடி எம்குடி. பரந்து விரிந்த உலகிற்கே நாகரிகத்தின் பாடத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் நாங்கள். வாங்கவும் விற்கவும் வந்த உங்களுக்கு எங்கள் நாட்டின் வளமும் பெருமையும் எப்படித் தெரியும். பாவம் . . . ( சிரிப்பு )

ஜாக்சன் : போதும் நிறுத்து. உம்மைக் குற்றவாளி என்கிறேன் நான் .

வீ. பா. கட்டபொம்மன் : நாங்கள் சொல்ல வேண்டியது அது. நாட்டுக் குரியவனிடமே கேட்டுப் பொருள்பெற வந்த நீர்தான் குற்றவாளி .

ஜாக்சன் : அதிகாரம் பெற்ற எங்களுக்கு வரி செலுத்தவில்லை. வட்டியும் கட்டவில்லை. இது குற்றமில்லையா ?

வீ. பா. கட்டபொம்மன் : வாழவந்தவனே ...! எம்மிடமா வரி கேட்கிறாய்? தங்கமெனச் செந்நெல் தழைத்தோங்கும் பூமி, எங்கள் பூமி ; காட்டைக் கழனியாக்கி, கல்லுக்குள் நீர் கொணரும் உழைப்பெங்கள்

©KTBS NOT TO BE REPUBLISHED

உழைப்பு. மானங்காக்கும் இம் மண் துகள் ஒவ்வொன்றும் எங்கள் சொத்து! வீசி வரும் தென்றலுக்கு விலை கேட்கிறாயா? வீணனே ! யாரிடம் வரி கேட்கிறாய் ? அனுமதி கேட்டு உள்ளே வர வேண்டிய நீ ஆளவந்தவனைப்போல் அதிகாரம் செலுத்துகிறாயா ? தன்மானமுள்ளவன் கட்டபொம்மன். தரமாட்டான் வரி தெரிந்துகொள் .

ஜாக்சன் : எங்களின் பெருமை தெரியாமல் பேசுகிறாய் நீ .

வீ. பா. கட்டபொம்மன் : மழைக்காக ஒதுங்கியவன் மனையைச் சொந்தம் கொண்டாடியது போல நாடாள எண்ணுகிறாயே. இதுதான் உனது பெருமையா? இழிந்தவனே ! இனியும் வரி எனும் சொல்லைக் கூறாதே .

ஜாக்சன் : உன்னைச் சிறைப்பிடிக்க ஆணையிடுகிறேன். ( கைகளைத்தட்டி ) பானர்மேன் இவனைக் கைது செய்யுங்கள் .

வீ. பா. கட்டபொம்மன் : சதிகாரனே. சந்திக்க வா என்று கூறி சங்கிலியால் பிணைக்க நினைக்கிறாயா ? பிடிபட மாட்டான் இந்த கட்டபொம்மன். நீசனே . . . நெருங்காதே விலகி நில் .

[அப்போது ஏற்பட்ட மோதலில் ஆங்கிலத்தளபதி காலின்ஸ் கொல்லப்படுகிறான். கட்டபொம்மனும் பிறரும் தப்பிச்செல்கின்றனர். அதைத் தொடர்ந்து பானர்மேன் தலைமையில் ஆங்கிலப்படை பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்குகிறது. கட்டபொம்மன் அங்கிருந்து தப்பிச்சென்று புதுக்கோட்டையை அடைகிறான். முதலில் வரவேற்று விருந்தோம்பிய புதுக்கோட்டை மன்னன் பின்னர் கட்டபொம்மனை ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கிறான்.

©KTBS NOT TO BE REPUBLISHED

கைது செய்யப்பட்ட கட்டபொம்மனுக்கு ஆங்கில அரசு தூக்குத் தண்டனை விதிக்கிறது.]

**காட்சி - 3**



| | | |
|---|---|---|
| இடம் | : | கயத்தாறு , தூக்குமேடை |
| பங்கு கொள்வோர் | : | வீரபாண்டிய கட்டபொம்மன் . ( தூக்குக் கயிற்றின் முன்னால் நின்று கொண்டு ) |
| வீ. பா. கட்டபொம்மன் | : | அன்னை நாடே ! அயலான் ஆதிக்கத்தை எதிர்த்த எனக்கு அவன் அளித்த பரிசு தூக்குமேடை. உன்மீது பிற நாட்டார் காலடி படாது காக்க எண்ணினேன். காலம் சதி செய்துவிட்டது. மரணத்திற்கு நான் அஞ்சவில்லை. என்னுடல் மறைந்தாலும் இம்மண்ணைக் காக்க மறவர் கூட்டம் திரண்டெழும் என்பதை நான் அறிவேன். வருங்காலத்தவர் விடுதலைக் கனியை விரும்பி உண்ண நான் ஒருவன் அழிவதால் நட்டமில்லை. என்னால் தினையளவாயினும் நாட்டிற்கு நன்மை ஏற்பட்டால் அதுவே போதும். சாகும் நாள் எனக்குத் திருநாளாகும். |

பெற்றெடுத்த தாய்நாட்டு மண்ணே ...! இதோ வருகிறேன். என்னை ஏற்றுக்கொள்! வாழ்க தாய்நாடு !

**அருஞ்சொற் பொருள் :**

பரங்கியர் - வெள்ளையர் ( இங்கிலாந்து நாட்டவர் ) ; அரி - சிங்கம் ; ஓலை தாங்கி - மடல் கொண்டு வருபவர் ; முகாம் - தங்கியிருக்கும் இடம்; வேங்கை - புலியினத்தில் ஒரு வகை ; குடி - குலம், இனம் ; பிணைக்க - கட்ட, சேர்க்க ; மறவர் - வீரர் ; நட்டம் - இழப்பு ; அவனி - உலகம், ஞாலம், சீர், பார் .

**பயிற்சி**

**அ. பிரித்தெழுதுக :**

காணவில்லை, புவியாளும், நிகழாதிருக்க, செந்நெல், என்னுடல் .

**பின்வரும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக .**

உரிமை, பாதுகாப்பு, தழைத்தோங்கி, சூழ்ச்சி .

**ஆ. பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 1. | கட்டபொம்மன் | - | ஆங்கில அலுவலர் |
| 2. | ஊமைத்துரை | - | ஆங்கிலத் தளபதி |
| 3. | ஜாக்சன் | - | ஆங்கிலத் தூதன் |
| 4. | காலின்ஸ் | - | பாஞ்சாலங்குறிச்சி சிற்றரசன் |
| 5. | ஆலன்துரை | - | கட்ட பொம்மன் தம்பி |

**பயிற்சி வினாக்கள்**

**இ. ஒரு வரியில் விடை தருக :**

1. ஊமைத்துரையை எத்தனை நாட்களாகக் காணவில்லை ?
2. வரிப்பணம் கேட்டு யார் வந்தார் ?

@KTBS NOT TO BE REPUBLISHED

3. ஆங்கிலேயரிடம் பணம் வாங்கியவர் யார் ?

4. ஜாக்சன் துரை யாருக்குக் கடிதம் அனுப்பினான் ?

5. ஜாக்சன் யாரை சிறைப்பிடிக்க முயன்றான் ?

**ஈ. நான்கு அல்லது ஐந்து வரிகளில் விடை தருக :**

1. ஆங்கிலேயர் பாளையக்காரர்களிடம் வரிவாங்கும் உரிமையை எவ்வாறு பெற்றனர் ?

2. வரிகேட்டு வந்த ஆலன் துரைக்குக் கட்டபொம்மன் கூறிய விடை யாது ?

3. ஒலை தாங்கி யாரிடமிருந்து கடிதம் கொண்டு வந்தான் ? அதில் கூறியிருந்த செய்தி யாது ?

4. கட்டபொம்மன் ஜாக்சன் துரையிடம் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொண்டான் ?

5. கட்டபொம்மன் வரிகட்ட மறுத்துக் கூறியதைத் தொகுத்து வரைக.

6. தூக்குமேடையிலிருந்த கட்டபொம்மன் நாட்டுக்கு வழங்கிய செய்தி யாது ?

@KTBS NOT TO BE REPUBLISHED

**செயல்திறன்**

**உ. சில விலங்குகளின், மரங்களின் இளமைப் பெயர்கள் பற்றி அறிக :**

விலங்குகள் :

1. அணிற்பிள்ளை 2. பூனைக்குட்டி 3. எருமைக்கன்று 4. புலிப்பறழ் 5. கீரிப்பிள்ளை 6. சிங்கக் குருளை 7. ஆட்டுக்குட்டி 8. மான்கன்று 9. எலிக்குஞ்சு 10. குதிரைக்குட்டி 11. யானைக்கன்று 12. கழுதைக்குட்டி

13. நாய்க்குட்டி 14. பசுங்கன்று 15. பன்றிக்குட்டி 16. கோழிக்குஞ்சு .

மரங்கள் :

1. வாழைக்கன்று 2. தென்னம்பிள்ளை .

**மொழித்திறன் பயிற்சி**

1. ஆண் யானை - களிறு, வாரணம்
2. பெண் யானை - பிடி
3. ஆண் குரங்கு - கடுவன்
4. பெண் குரங்கு - மந்தி
5. பெண் மான் - பிணை
6. கொண்டல் - கீழ்க்காற்று
7. சிறுகால் - தென்றல்
8. அடிசில் - உணவு

**சமவெளி மரங்களில் வாழும் சில பறவைகள் :**

1. மஞ்சள் சிட்டு
2. செங்காகம்
3. சுடலைக் குயில்
4. பனங்காடை
5. தூக்கணாங்குருவி

**நீர்நிலைகளில் வாழும் சில பறவைகள் :**

1. கொக்கு
2. தாழைக்கோழி
3. பவளக்காலி
4. ஆற்று உள்ளான்
5. முக்குளிப்பான்

@KTBS NOT TO BE REPUBLISHED

6. நாரை

7. அரிவாள் மூக்கன்

8. கரண்டி வாயன்

9. ஊசிவால் வாத்து .

**மலைகளில் வாழும் சில பறவைகள் :**

1. இருவாச்சி

2. செந்தலைப் பூங்குருவி

3. மின்சிட்டு

4. கருஞ்சின்னான்

5. நீலகிரி

6. நெட்டைக் காலி

7. பொன்முதுகு

8. மரங்கொத்தி

9. சின்னக்குறுவான்

10. கொண்டை உழவாரன்

11. இராசாளி பருந்து

12. பூமன் ஆந்தை .

@KTBS
NOT TO BE REPUBLISHED

# இலக்கணம்

## அணி

**இரட்டுற மொழிதல் அணி,**

ஒரு சொல்லோ தொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் எனப்படும்.

எடுத்துக்காட்டு : ''ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்.''

**எடுத்துக்காட்டு உவமையணி :**

உவமைக்கும் பொருளுக்கும் இடையில் போல, போன்ற உருபுகள் மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

எடுத்துக்காட்டு :

வெள்ளத்து அனையது மலர்கூட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

நீரோட்டத்தின் தன்மைக்கு ஏற்ப மலர் உயர்ந்து நிற்கும். அது போல மக்களது ஊக்கத்திற்கு தகுந்தவாறு அவர்களது உயர்வு அமையும்..

**வினாக்கள் :**

1. இரட்டுற மொழிதல் அணி - விளக்கம் தருக .
2. எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக .

✤ ✤ ✤

©KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 22

# பல்சுவைப் பாடல்

## கலைசைச் சிலேடை வெண்பா

### ( மனப்பாடம் 4 வரிகள் )

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே - மேவும்
அரிவையம்பா கத்தா னரணொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தா னகம் .

**- தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் .**

### அ. ஆசிரியர் குறிப்பு :

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் திருவாடுதுறை ஆதீனப் புலவராகச் சில காலம் இருந்துள்ளார். இவர் சைவ சமயப் பற்றுடையவர். கலைசைக் கோவை, கலைசைச் சிலேடை வெண்பா, கலைசைச் சிதம்பரேசர் பரணி, திருவா வடுதுறைக் கோவை, சிவஞான முனிவர் துதி, கீர்த்தனை போன்றவற்றை எழுதியுள்ளார். இவரது காலம் இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர் .

### ஆ. நூல் குறிப்பு :

தொண்டை நாட்டில் உள்ள கலைசை என்னும் ஊரில் பசுங்கழு நீர்த் தொட்டிகள் அமைத்துப் பசுக்களை வளர்த்து வந்ததால் தொட்டிக்கலை என்று அழைக்கப் பெற்றது. கலைசை நகரில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் இரு பொருள் படுமாறும், நயமாகவும் வெண்பாக்களால் பாடப்பட்ட நூல் கலைசைச் சிலேடை வெண்பா .

சிலேடை என்பது இரட்டுற மொழிதல் ஆகும். ஒரு சொல்லோ, தொடரோ இரு பொருள் தருவது செம்மொழிச் சிலேடை. ஒரு சொல்லோ, தொடரோ பிரிந்தும், பிரியாமலும் இரு பொருள் தருவது பிரிமொழிச் சிலேடை. இப்பாடலின் இறுதி இரு அடிகளும் ஒரே மாதிரியாக வந்து இருவேறு பொருள் தருவதால் மடக்குச் சிலேடை ஆகும் .

NOT TO BE REPUBLISHED @KTBS

**சொற்களஞ்சியம்**

## இ. சொற்களைப் பிரித்தறிக :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வண்டினம் | - | வண்டு | + | இனம் | | | |
| காவலரை | - | கா | + | அலரை | | | |
| அரிவையம் பாகத்தான் | - | அரிவை | + | அம் | + | பாகத்தான் | |
| | - | அரி | + | வை | + | அம்பு | +ஆகத்தான் |
| அரணொரு | _ | அரண் | + | ஒரு | | | |
| மூன்றெய்தோன் | _ | மூன்று | + | எய்தோன் | | | |

## ஈ. அருஞ்சொற்பொருள் :

ஆவலுடன் - ஆசையுடன் ; பாவலரும் - புலவர்களும் ; காவலரை - அரசரை, சோலை மலர்களை ; சூழும் - சுற்றி இருக்கிற ; வண்டு இனம் - வண்டு கூட்டம் ; மேவும் - விரும்பும் ; அரிவை - உமாதேவி, பார்வதி ; அம்பாகத்தான் - அழகிய இடப்பக்கத்தில் பெற்றவன் ; அரி - திருமால் ; வை - கூர்மை ; அரண் ஒரு மூன்று - ஒப்பற்ற மதில்களைப் பெற்ற திரிபுரம் ; எய்தோன் - அழித்தவன் ( சிவபெருமான் ) ; அகம் - இடம் .



**உ.விளக்கவுரை :**

ஆறு கால்களையுடைய வண்டுகள் சோலையுள் புகுந்து ‘ இம்மலர்’ உண்ணும் தேனைப் பெற்றுள்ளது என்றும். ‘ இம்மலர் ’ உண்ணாத் தேனைப் பெற்றுள்ளது என்றும் ஆராய்வதை ‘ கா அலரைச் சூழும் ’ என்னும் தொடர் உணர்த்துகிறது. பார்வதியைச் சிவபெருமான் இடப் புறத்தில் தாங்கிய செய்தியை ‘ அரிவை அம் பாகத்தான் ’ என்னும் தொடர் தெரிவிக்கிறது .

தவப்பயனால் சிவன் அருள் பெற்று அசுரர் மூவர் பறக்கும் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளில் சென்று தேவர்களையும், பிறரையும் துன்புறுத்தி வந்தனர். செருக்குற்ற அசுரர்களை அழிக்கச் சிவபெருமானே ஆயத்தமானார். போருக்குப் புறப்பட்ட சிவபெருமான் மேருமலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், பிரம்மனைச் சாரதியாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு புறப்பட்டார். தான் அம்பாகி அசுரர்களை அழிக்கப் போவதை எண்ணித் திருமால் இறுமாப்பு உற்றார். இதை அறிந்த சிவபெருமான் சிரித்து, அச்சிரிப்பில் வெளிப்பட்ட தீச்சுடரொளியால் திரிபுரத்தை எரித்தார். இச் செய்திகளையே ‘ அரிவை அம்பாகத் தான் அரண் ஒரு மூன்று எய்தோன் ’ என்னும் தொடர் குறிக்கிறது .

@KTPS NOT TO BE REPUBLISHED



## பொருள்திறன் பயிற்சி

**ஊ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. ‘ காவலரை ’ என்னும் சொல் ‘ சோலையில் மலர்ந்த பூக்கள் ’ என்னும் பொருளைத் தரும்போது ___________ எனப் பிரியும் .

   அ). காவலர் + ஐ  ஆ). கா + அலரை  இ). கா + வலரை

2. ‘ அரிவையம் பாகத்தான் ’ இத்தொடரில் சிவபெருமான் ‘பார்வதியை இடப்பாகத்தில் பெற்றவன் ’ என்பதைக் குறிக்கும் சொல் _______________ .

   அ). அரிவை  ஆ). வையம்பு  இ). பாகத்தான்

3. அரிவையம் பாகத்தான் என்பதில் ‘ அரிவை ’ என்னும் தொடர் குறிப்பது _______________ .

   அ). பெண்ணை  ஆ). பார்வதியை  இ). திருமாலை

**எ. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்க :**

1. செம்மொழிச் சிலேடை என்பது யாது ?
2. எது பிரிமொழிச் சிலேடை எனப்படுகிறது ?
3. மடக்குச் சிலேடை என்பது யாது ?
4. ஆறுகால் வண்டினம் காவலரைச் சூழும் கலைசை என்ற தொடரின் பொருள் எழுதுக .

**ஏ. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க :**

1. கலைசைச் சிலேடை வெண்பா - குறிப்பெழுதுக .
2. தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பற்றிக் குறிப்பெழுதுக .

**திறன்வளர் தொடர்பணி**

**ஐ. பின்வரும் பாடலை படித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடையளிக்க:**

**சேமிக்க வேண்டும் - காசு**
**சேமிக்க வேண்டும் .**
**சிக்கனமாய்ச் செலவு செய்து**
**காண்பிக்க வேண்டும் .**

© KTBS NOT TO BE REPUBLISHED

**தேவைக்குத் தான் மின்சாரத்தை**

**எரித்திட வேண்டும் - சும்மா**

**தேவையில்லா மின்சாரத்தை**

**அணைத்திட வேண்டும் .**

**எரிசக்தி வீணாவதை**

**மிச்சம் ஆக்குவோம் - நம்**

**எதிர்காலம் தலைமுறையின்**

**அச்சம் போக்குவோம் .**

1. சேமிக்கவும், காண்பிக்கவும் வேண்டுவன யாவை ?
2. மின்சாரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் ?
3. எதிர்காலத் தலைமுறையின் அச்சம் போக்கும் வழியாது ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

**ஓ. பிரித்து எழுதுக :**

1. தேவைக்குத்தான் =
2. தேவையில்லா =
3. வீணாவதை =
4. போக்குவோம் =

**ஓ. மேற்கண்ட பாடலை நயமாகப் பாடிப் பழகவும் :**

**ஔ. சொல் உருவாக்குதல் :**

முடிவே தொடக்கம் - நீங்களும் உருவாக்கலாமே .

எடுத்துக்காட்டு ; உலகு, கும்மி, மிளகு, குளவி, விருந்து, தும்பி, பிறப்பு .

1. கணக்கு ______ ______ ______ _____
2. கரும்பு _____ _____ _____ _____ _____

**வாழ்க்கைத் திறன்கள் ;**

**நீங்கள் என்ன செய்வீர்கள் .**

1. நீங்கள் தற்போது ஏழ்மை நிலையில் உள்ளீர் என வைத்துக் கொள்வோம். படித்து பட்டம் பெற்று பெரிய பதவி கிடைத்து கை நிறைய சம்பளம் வரும் போது என்ன செய்வீர்கள் .

அ. கார், பங்களா என்று சொகுசாக வாழ்க்கை நடத்துவோம் .

ஆ. வருமானத்தில் ஒரு பகுதியை பிற்காலத்திற்காக சேமித்து வைப்போம். [வயதான பெற்றோருக்காக]

இ. அடிக்கடி வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்வோம் .

2. உங்களுக்கு அன்று சம்பள நாள். சுற்றுலா செல்ல தயாராகிக் கொண்டு இருக்கிறீர், உறவினர் ஒருவர் வந்து உதவி கேட்கிறார், என்ன செய்வீர்கள் ?

அ. நாங்கள் சுற்றுலா புறப்பட்டிருக்கிறோம் எங்களுக்கே போதாது என்று கூறுவோம் .

ஆ. சுற்றுலாவை தவிர்த்து விட்டு உதவி செய்வோம் .

இ. உதவியும் செய்துவிட்டு குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக அருகில் உள்ள சுற்றுலா மையத்திற்கும் சென்று வருவோம் .

**விழுமியக் கல்வி :**

சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்துதல் .

சேமிப்பதினால் உண்டாகும் நன்மைகளை எடுத்துக் கூறுதல் .

©KTBS NOT TO BE REPUBLISHED

S1U5Q8

## பாடம் 23

# நீதி நூல்கள் கூறும் வாழ்க்கை நெறி

தமிழில் தோன்றிய நீதி நூல்கள் பற்பல. சங்க காலச் சான்றோர்களின் அனுபவ உண்மைகளையே, பிற்காலப் புலவர்கள் நீதிக் கருத்துகளாகப் போற்றினர். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வழங்கப்பெறுவன. அதுபோலவே, சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களைச் சேர்த்த தொகுதி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கலாயிற்று. நீதி நூல்களில் இலக்கியச் சுவையும், கற்பனையும் குன்றித்தோன்றினும் அவை மக்கள் வாழ்வை வளப்படுத்தும் சீரிய தொண்டினைச் செய்கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், பழமொழி, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்ற பதினொரு நூல்களும் நீதியை இயம்புகின்றன .

பதினொன்று நூல்களையும் குறிக்கும் வெண்பாப்பாடல் :

" நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்<br>
பால் கடுகங் கோவை பழமொழி - மாமூலம்<br>
இனியவை சொல் காஞ்சியுடனே லாதி யென்பவே<br>
கைந்நிலையை வாங் கீழ்க் கணக்கு " .

நாம் முதலில் சிந்திக்க வேண்டியது நீதி நூல்கள், நீதிக்கதைகள் நமக்குத் தேவையா ? நம் நாட்டில் தோன்றிய முனிவர்கள், ரிஷிகள், ஞானிகள், மகான்கள், மதகுருமார்கள், அறிவில் சிறந்த மேதைகள் இவர்களுடைய வாழ்க்கை வரலாற்று அனுபவம், கொள்கைகள் இவற்றிலிருந்து நாம் கற்க வேண்டிய விவரங்கள், செய்திகள் ஏராளம் .

ஒருவன் சிறுவயதில் தாய், தந்தை பின்னர், குரு இவர்களிடமிருந்து அடிப்படை நல்லொழுக்கம், பண்பாடு ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள இயலும். பின்னர் அவனுடைய வாழ்க்கையில் நண்பர்கள், சுற்றம், சொந்தம் போன்ற வெளிவட்டத்திலிருந்தும் அவன் வாழக் கற்றுக் கொள்கிறான். நாம் எவ்வாறு நல்ல மனிதனாக வாழவேண்டும் என்பதை அறிந்துகொள்ள நீதி நூல்கள் மற்றும் நீதிக்கதைகள் உதவுகின்றன .

@KTBS NOT TO BE REPUBLISHED

இனி, பதினோரு நூல்களில் சில நூல்களைப் பற்றிச் சுருக்கமான விளக்கத்தையும், அவற்றில் கூறப்பட்டுள்ள நீதிகளையும் நோக்குவோம். பிறர் தனக்குச் செய்த நன்றி மறவாமை, பொறுமை இனிய சொல் , பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமை, கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை நல்ல இனத்தாரோடு நட்புக்கொள்ளல் ஆகிய எட்டும் சான்றோரால் எடுத்துக் கூறப்படும் ஒழுக்கங்களாகும். நற்குடிபிறப்பு, நீண்ட வாழ்நாள், செல்வம், அழகுடைமை, நிலத்து உரிமை, சொல்லின் மேன்மை, கல்வி, நோய் இல்லாமை என்னும் இந்த எட்டையும் உடையவர் ஒழுக்கத்தில் தவறாது இருப்பர். ‘ ஒழுக்கம் ’ என்ற குணத்தினைப் பற்றி நீதி நூல்களின் வாயிலாக அறியும் பொழுது அதன் ‘ சிறப்பு ’ உயர்வாகத் திகழ்கிறது. ஒருவருடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவரே காரணம். நல்லொழுக்கத்தைப் போற்றி வாழ்பவன் தெய்வமாகக் கருதப்படுவான். தன்னை உயர்ந்தவனாகச் செய்து கொள்பவனும் அவனே ! தாழ்ந்தவனாகச் செய்து கொள்பவனும் அவனே !

**நூலகம்**



@KTBS NOT TO BE REPUBLISHED

**1. திரிகடுகம் :**

இதன் ஆசிரியர் நல்லாதனார் ஆவார். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மூலிகைப் பொருட்களால் ஆகிய மருந்து உடல் நோயைப் போக்க

வல்லது. திரிகடுகம் என்ற நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறப்பெறும் மூன்று கருத்துக்கள் உள்ளத்தில் உள்ள நோயைத் தீர்க்கும் தன்மையுடையவை. சான்றாக, தன்னைப் புகழ்ந்து திரிவதும், வீணாகக் கோபம் கொள்வதும், பொருள்யாவற்றையும் தானே அடைய வேண்டும் என நினைப்பதும் ஆகிய தாழ்ந்த பண்புகள் ஒருவனது செல்வத்தை அழிக்கும் ஆயுதங்களாகும். இத்தகைய சிறந்த நீதிகளைக் கூறும் இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது .

**2. ஆசாரக்கோவை :**

இந்நூலின் ஆசிரியர் பெருவாயின்முள்ளியார். மக்களிடையே நூறு ஒழுக்கத்தை எடுத்துரைப்பது ஆசிரியரின் நோக்கம். இந்நூல் நூறு பாடல்களைக் கொண்டது. இந்நூல் கற்றவர் செயல்கள் என்னவென்று கூறுகிறது. பெறுவதற்கரிய நூற்கேள்வியை உடையவர், தவறியும் பலர் நடுவிலிருந்து ஒருவரைத் தூற்றார்; இகழ்ந்து பேசமாட்டார் ; படுத்து உறங்கார்; தமக்கு இயலாத செயல்களைச் செய்கின்றோம் என ஒப்புக்கொண்டு, பின்பு அதைச் செய்யாமல் இரார் ; முறையில்லாது வறியவரை எள்ளி இகழ்ந்து இழிவாய்ப் பேசமாட்டார் .

**3. பழமொழி நானூறு :**

இது நானூறு பழமொழிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட நூல். இவையாவும் முன்னோர்கள் தங்கள் வாழ்க்கையின் அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். இதனை இயற்றியவர், முன்றுரையறையனார் என்னும் சமணராவார். இந்நூலில் காணப்படும் நானூறு பாடல்களிலும் பழமொழியைக் கூறுவதால் இந்நூல் பழமொழி நானூறு எனப்பெயர் பெற்றது .

**4. முதுமொழிக்காஞ்சி :**

இந்நூலின் ஆசிரியர் மதுரை கூடலூர் கிழார். நீதி நூல்களில் மிகவும் சிறிய நூல் இதுவே. மொத்தம் நூறு அடிகள் இருக்கின்றன. இந்நூல் பத்துப் பத்து பாக்களாக அமைந்துள்ளன. அவை - சிறந்தபத்து, அறிவுப்பத்து,

NOT TO BE REPUBLISHED ©KTBS

பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, தண்டாப்பத்து போன்றவை. ஒழுக்கமுடைமையை இந்நூல் பெரிதும் பாராட்டுகிறது .

**5. ஏலாதி :**

இந்நூல் எண்பது பாடல்களைக் கொண்டது. சமண சமயத்தைச் சார்ந்த கணிமேதாவியார், இதன் ஆசிரியர். ஏலம் என்ற சொல் ஆதி என்ற சொல்லுடன் சேர்ந்து ஏலாதி எனப்பெயர் பெற்றது. இதன் பொருள், ஏலம் முதலிய ஆறுவகைப் பொருட்களான, இலவங்கம், ஏலம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு இந்த ஆறுவகைப் பொருட்கள் சேர்த்து செய்யப்பட்ட மருந்துக்கு ஏலாதி என்று பெயர். அம்மருந்து இருமல், காசம், மேல்மூச்சு வாங்குதல் முதலிய உடற்பிணியைப் போக்கும். உடல் நீண்டகாலம் வாழும்படிச் செய்யும். அதே போல இந்நூற்பாடல்கள் ஒவ்வொன்றிலும் செய்வன, தவிர்ப்பன என்று சொல்லப்படும் ஆறு கருத்துக்கள் மக்களின் அறியாமையால் உண்டாகும் துன்பத்தைப் போக்கி, இன்மை, மறுமை, வீடு இன்பங்களைத் தரும். ஆதலால் " ஏலாதி " எனப் பெயர் பெற்றது .

‘செய்வன திருந்தச்செய்’ என்பது பழமொழி. செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதில் முழுக்கவனத்தோடு நிறைவாகச் செய்யவேண்டும். அரைகுறை வேலை ஆபத்தானது .

பணிவு என்னும் பண்பு மரியாதையான நடத்தையின் மூலம்தான் வெளிப்படுகிறது. மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நம்மை நாம் கட்டுப்படுத்திக் கொள்ளும் போது பணிவு வெளிப்படுகிறது. இதனால் ஒருவர் ஆற்றல் குறைந்தவர் என்றோ, தாழ்வு மனப்பான்மை உடையவர் என்றோ கருதுவது தவறு .

மக்கள் யாவரும் நல்ல நூல்களைப் படிப்பதைவிட நல்ல ஒழுக்கமுடையவராய் இருப்பது சிறந்தது. ஒருவன் ஈகைத் தன்மை உடையவனாக இருப்பதைவிட மெய்மை உடையவனாக இருப்பது சிறந்ததாகும் .

வாழ்க்கையில் வெற்றிக்கு முதல் தகுதி, காலத்தை நல்ல வழியில் பயன்படுத்துதலே ஆகும். " காலம் " நமது இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொண்டு நம்மை நல்வழிப்படுத்தும். நல்ல நண்பன், நல்ல வழிகாட்டி,

NOT TO BE REPUBLISHED © KTBS

போனால் வராத பொழுது போன்றவற்றை நாம் போற்றி வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதுவே மானுடம் தழைக்கும் வழியாகும். சிறந்த ஒழுக்கமுமாகும் .

## பயிற்சி

**அ. அருஞ்சொற் பொருள் அறிக :**

மருவிய - தோன்றிய ; நூல்கள் - புத்தகங்கள் ; குன்றி - குறைந்து ; சீரிய - சிறப்பான ; தொண்டு - சேவை ; நோக்குவோம் - காண்போம், பார்ப்போம் ; நற்குடி - நல்ல குடும்பம் ; சான்றோர் - அறிஞர், நன்கு படித்தோர் ; நூல்களின் வாயிலாக - புத்தகங்களின் மூலமாக ; சான்றாக - எடுத்துக்காட்டாக ; உறங்கார் - தூங்கமாட்டார் ; இரார் - இருக்கமாட்டார்; வறியவர் - ஏழை, கல்வியறிவு இல்லாதவர், பலமில்லாதவர் ; இழிவாய் - கேவலமாய் ; இயற்றியவர் - எழுதியவர் .

**ஆ. வாய்மொழி வினாக்கள் :**

1. தமிழில் தோன்றிய நீதி நூல்கள் எத்தனை ?
2. பதினோரு நூல்களும் எதைக் கூறுகின்றன ?
3. திரிகடுகத்தின் ஆசிரியர் யார் ?
4. ஒழுக்கமுடைமையைப் பெரிதும் பாராட்டும் நூல் எது ?
5. அரைகுறை வேலை என்னவாகும் ?
6. மக்கள் எப்படி இருப்பது நல்லது ?

**இ. ஒரு வாக்கியத்தில் விடையளிக்க :**

1. சங்க இலக்கியங்கள் யாவை ?
2. நீதி நூல்கள் எப்படி உதவுகின்றன ?
3. ஒருவன் உயர்வுக்கும், தாழ்வுக்கும் யார் காரணம் ?
4. தெய்வமாகக் கருதப்படுபவர் யார் ?

©KTBS NOT TO BE REPUBLISHED

5. உடல் நோயைப் போக்கும் மூன்று மருந்துகள் யாவை ?

6. பெருவாயின் முள்ளியாரின் நோக்கம் யாது ?

7. " பழமொழி நானூறு " என பெயர் வரக்காரணம் என்ன ?

8. பணிவு என்னும் பண்பு எதன் மூலம் வெளிப்படுகிறது ?

9. வெற்றிக்கு முதல் தகுதி எது ?

10. நீதி நூல்களில் மிகவும் சிறிய நூல் எது ?

**ஈ. நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1. பதினெண் கீழ்கணக்கு நூல்கள் யாவை ?

2. பதினோரு நூல்களையும் குறிக்கும் வெண்பாப் பாடலை எழுதுக?

3. சான்றோரால் கூறப்படும் ஒழுக்கங்கள் யாவை ?

4. ஒருவனது செல்வத்தை அழிக்கும் ஆயுதங்கள் யாவை ?

5. ஏலாதி என்பதன் பொருள் யாது ?

6. மானுடம் தழைக்கும் நல்வழிகளை எழுதுக ?

**உ. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ___________ போற்றி வாழ்பவன் தெய்வமாகக் கருதப்படுவான்

2. திரிகடுகம் ___________ வெண்பாக்களை கொண்டது .

3. _______, _______, _______ ஆகிய மூன்று மூலிகைகளான மருந்து உடல் நோயைப் போக்கவல்லது .

4. பழமொழி நானூறில் ____________ பாடல்கள் உள்ளன .

5. முதுமொழிக் காஞ்சி நூலின் ஆசிரியர் _____________ ஆவார் .

6. ஏலாதி பாடல்கள் ஒவ்வொன்றிலும் _______,_______ என்று சொல்லப்படும் ஆறு கருத்துக்கள் உள்ளன .

NOT TO BE REPUBLISHED @KTBS

ஊ. பொருத்துக :

| அ | | | ஆ |
|---|---|---|---|
| 1. | திரிகடுகம் | i) | பெருவாயின் முள்ளியார் |
| 2. | ஆசாரக்கோவை | ii) | நல்லாதனார் |
| 3. | பழமொழி நானூறு | iii) | கூடலூர் கிழார் |
| 4. | முதுமொழிக் காஞ்சி | iv) | கணிமேதாவியார் |
| 5. | ஏலாதி | v) | முன்றுரையறையனார் . |

எ. பிரித்து எழுதுக :

பற்பல =

அறிவுடைமை =

அழகுடைமை =

பழமொழி =

பதினொன்று =

மக்களிடையே =

என்னவென்று =

முறையில்லாது =

நானூறு =

அம்மருந்து =

உடற்பிணி =

நல்வழி =

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஏ. சேர்த்து எழுதுக :

ஒழுக்கம் + ஆகும் =

பத்து + பாட்டு =

நீதி + கதை =

நல்ல + குடி =

நல்ல + ஒழுக்கம் =

நோய் + இல்லாமை =

தன்மை + உடைய =

எடுத்து + உரைப்பது =

நடுவில் + இருந்து =

உண்மைகள்+ஆகும் =

ஒன்று + ஒன்று =

ஐ. எதிர்ச்சொல் தருக :

பிற்காலம் ;

நீதி =

குன்றி =

தோன்றி =

உயர்ந்தவன் =

மறந்து =

இகழ்ந்து =

மெய்மை =

@KTBS
NOT TO BE REPUBLISHED

வெற்றி =

நண்பன் =

**ஓ. வாக்கியத்தில் அமைக்க :**

**அறியாமை ; கற்பனை ; தொண்டு ; அனுபவம் ; ஒழுக்கம் ; பழமொழி; நூல்கள் .**

**ஓ. சிறு குறிப்பு வரைக :**

1. திரிகடுகம்,

2. ஆசாரக் கோவை,

3. ஏலாதி .

**ஔ.கீழ் உள்ள சொற்களுல் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. தேர்வில் வெற்றி பெற்றதால் அகிலன் ______ இருந்தான் .
2. யானை நோயுற்று இருந்ததால் அதனால் ______ நடக்க இயலவில்லை .
3. அடுத்தவருக்குக் கேட்காதபடி கண்ணன் காதுக்குள்ளே ______ பேசினான் .
4. முயல் ______ போகும்போது காண்பதற்கு அழகாக இருக்கும் .
5. பெரியோரை மதித்துப் ______ நடக்க வேண்டும் .

[ வேகமாக, குதித்துக்குதித்துப், பணிவாக, மெதுவாகப், மகிழ்ச்சியாக ]

✤ ✤ ✤

©KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 24

# எல்லாம் நன்மைக்கே

X6X2C2

**( கதை )**

" பாட்டி சீக்கிரமா கதை சொல்ல ஆரம்பியுங்க " என்று குழந்தைகள் நச்சரிக்க ஆரம்பித்தன. பாட்டி கதை சொல்ல ஆரம்பித்தார் .

மலையடிவாரத்தில் உள்ள ஒரு நாட்டை ஒரு ராஜா ஆண்டுகொண்டிருந்தார். அவருக்கு ஒரு மந்திரி இருந்தார். மந்திரி மதிநுட்பமான ஆள் .

ஒரு நாள் ராஜா மாம்பழத்தை எடுத்து நறுக்கிக் கொண்டிருந்தார். அப்போது தவறுதலாகக் கூர்மையான கத்தி ராஜாவின் வலது கை சுண்டு விரலில் பட்டு காயம் ஏற்பட்டு விட்டது .

ராஜாவின் சுண்டு விரலில் காயம் பட்டதைப் பார்த்த வேலைக்காரி சத்தம் போட்டாள். எனவே அரண்மனை வைத்தியர் ஓடி வந்து ராஜாவின் விரலில் காயம் பட்ட இடத்தில் மருந்து வைத்துக் கட்டுப்போட்டார் .

அன்று மாலை ராஜாவின் கையில் காயம் பட்டுவிட்டது என்பதைக் கேள்விப்பட்டு மந்திரி அரண்மனைக்கு வந்தார், " மந்திரி எப்போதும் எல்லாம் நன்மைக்கே " என்று சொல்லிக் கொண்டே இருப்பார். ராஜாவைப் போய்ப் பார்த்துவிட்டு அப்போது, " எல்லாம் நன்மைக்கே " என்றார் .

மந்திரி சொன்னதைக் கேட்ட ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது. எனவே அருகில் நின்ற காவலரைப் பார்த்து, " மந்திரியைச் சிறையில் அடைங்க ! " என்று உத்தரவிட்டார். எனவே அரண்மனைக் காவலர், மந்திரியை அழைத்துக் கொண்டு போய் சிறையில் அடைத்தான். அப்போது மந்திரி, " எல்லாம் நன்மைக்கே ! " என்றார் .

ஒரு நாள் ராஜா காட்டிற்கு வேட்டைக்குச் சென்றார். வேட்டைக்குச் சென்ற இடத்தில் பெரிய புயலடித்தது. எனவே ராஜாவுடன் சென்றவர்கள்

© KTBS NOT TO BE REPUBLISHED

நாலா திசைகளிலும் பிரிந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசை நோக்கிச் சென்றனர். ராஜாவும் காட்டில் திக்குத் தெரியாமல் பாதை மாறிச் சென்றுவிட்டார் .

அப்போது அங்கு வந்த ஆதிவாசி இனமக்கள் ராஜாவைப் பிடித்துக் கொண்டுபோய் தன் கூட்டத்தின் தலைவன் முன்னால் நிறுத்தினர். ஆதிவாசிக் கூட்டத்தினர், தான் வணங்கும் வனதேவதைக்குப் பலியிட எந்த வித உடல் குறையும் இல்லாத ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருந்த நேரம் அது .

எனவே, ஆதிவாசி மனிதர்களில் ஒருவன் தன் கூட்டத்தின் தலைவரிடம், " இந்த மனிதன் மிகவும் அழகாகவும், வாட்டசாட்டமாகவும் இருக்கின்றார். எனவே, இன்று இரவு நடைபெற உள்ள வனதேவதைக்கான பூஜைக்கு இந்த மனிதனையே பலியிடலாம் " என்று கூறினான் .

ஆதிவாசிகளின் தலைவன் ராஜாவின் அருகில் சென்று பார்த்தான். அப்போது ராஜாவின் வலது கை சுண்டு விரலில் கட்டுப் போடப்பட்டிருப்பதைக் கவனித்தான். ராஜாவிடம், இது என்ன கட்டு? என்று கேட்டான் ஆதிவாசிகளின் தலைவன். ராஜா, தன் சுண்டு விரலில் போடப்பட்டிருந்த கட்டை அவிழ்த்துக் காயத்தை ஆதிவாசிகளின் தலைவனிடம் காட்டினான். அதைப் பார்த்த ஆதிவாசிகளின் தலைவன், இந்த மனிதனின் உடம்பில் காயம்பட்டுள்ளது . நம் தேவதைக்கு உடம்பில் காயம்படாத வடுபடாத மனிதனைத்தான் பலியிட வேண்டும், எனவே இவனை விடுவித்து விடுங்கள் என்று உத்தரவிட்டான். எனவே ஆதிவாசிகள், ராஜாவை விடுவித்து விட்டனர். அப்போது ராஜா, தன் கையில் காயம் பட்டதைப் பார்த்துவிட்டு, எல்லாம் நன்மைக்கே ! என்று மந்திரி கூறியதை நினைத்து பார்த்தார். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று எண்ணி அக்காட்டிலிருந்து வேகமாக நடந்து தன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார் .

©KTBS NOT TO BE REPUBLISHED

அரண்மனைக்கு வந்ததும் முதல் வேலையாக, சிறையில் அடைபட்டுக்கிடந்த மந்திரியை விடுவிக்கச் சொன்னார் ராஜா. சிறையில் இருந்து விடுதலையானதும் நேராக ராஜாவை வந்து பார்த்தார் மந்திரி. மந்திரியிடம் ராஜா நடந்த கதையை எல்லாம் கூறியபின் என் சுண்டு விரல் வெட்டுப்பட்டதும், " எல்லாம் நன்மைக்கே என்று சொன்னது சரிதான் ஆனால் உம்மைச் சிறையில் அடைக்கச் சொன்ன போதும், ‘ எல்லாம் நன்மைக்கே ’ என்று ஏன் கூறினீர் ? " என்று கேட்டார் .

" ராஜா நீங்கள் என்னைச் சிறையில் அடைக்கச் சொல்லி உத்தரவு இடவில்லை என்றால் காட்டிற்கு வேட்டையாடச் செல்லும் போது என்னையும் தங்களுடன் அழைத்து இருப்பீர்கள், நானும் உங்களுடன் காட்டிற்கு வேட்டையாட வந்திருப்பேன், காட்டில் நீங்கள் வழி தவறிச் செல்லும் போதும் உங்களை விட்டுப்பிரிய மனமில்லாமல் நானும் கூடவே வந்திருப்பேன். ஆதிவாசிகள் உங்களோடு சேர்த்து என்னையும் வனதேவதைக்குப் பலி இட அழைத்துக் கொண்டு சென்றிருப்பார்கள். உங்கள் உடம்பில் குறை இருந்ததால் உங்களை விடுவித்துவிட்டு, என்னை அந்த வனதேவதைக்குப் பலியிட்டு இருப்பார்கள். எனவேதான், நான் என்னைத் தாங்கள் சிறையில் அடைத்த போதும் ‘ எல்லாம் நன்மைக்கே ’ என்று கூறினேன் ", என்று விளக்கம் கூறினார் மந்திரி. மந்திரியின் மதி நுட்பத்தைப் பாராட்டிய ராஜா அதன் பின் மந்திரியிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டார். ராஜாவும் மந்திரியும் ஒற்றுமையாக வாழ்ந்து, ரா பரிபாலனம் செய்தனர் என்று கதையைக் கூறி முடித்தார் பாட்டி .

NOT TO BE REPUBLISHED @KTBS

## பயிற்சி

**அ. அருஞ்சொற் பொருள் :**

நச்சரிக்க - விடாபிடியாக ; மதி நுட்பமான - புத்திசாலியான, அறிவாளியான ; நாலா திசைகளிலும் - நான்கு திசைகளிலும் ; திக்குகள் - திசைகள் ; ஆதிவாசிகள் - காட்டில் வாழும் மக்கள் ; வைத்தியர் - மருத்துவம் செய்பவர் .

**ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. ராஜா நறுக்கி கொண்டிருந்தது ________________ .

   ( தேங்காய் , மாம்பழம் , மாதுளை )

2. ராஜாவை பிடித்துக்கொண்டு போனவர்கள் ____________ .

   ( திருடர்கள் , எதிரிகள் , ஆதிவாசிகள் )

3. ராஜாவுக்கு காயம்பட்டதும் _____________ என்றார் மந்திரி .

   ( வேதனை , சந்தோஷம் , எல்லாம் நன்மைக்கே )

4. ராஜா மந்திரியை ___________ அடைக்க உத்தரவிட்டார் .

   ( அறையில் , மனையில் , சிறையில் )

**இ. பொருத்துக :**

1. பாட்டி - சிறையில் அடைக்கப்பட்டவர்
2. மந்திரி - கடத்தப்பட்டவர்
3. ராஜா - கதை சொன்னவர்

©KTBS
NOT TO BE REPUBLISHED

**ஈ. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1. யார், யாரிடம் கதை சொல்லக் கேட்டனர் ?
2. ராஜா எதை நறுக்கிக் கொண்டிருந்தார் ?
3. ராஜாவுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது ?
4. ஆதிவாசி தன் கூட்டத்தின் தலைவரிடம் கூறியது என்ன ?
5. ராஜாவை காட்டுவாசிகள் ஏன் நரபலி கொடுக்கவில்லை ?

**உ. மூன்று வாக்கியங்களில் விடை தருக :**

1. இக்கதை நமக்கு உணர்த்தும் கருத்து யாது ?
2. சிறைப்பட்ட அமைச்சர் கவலைப்படாதது ஏன் ?
3. ராஜா ஏன் கடத்தப்பட்டார் ?

**ஊ. சேர்த்தெழுதுக :**

1. மலை + அடிவாரம் =
2. விடுதலை + ஆனது =
3. மனம் + இல்லாமல் =

**எ. பிரித்தெழுதுக :**

1. உத்தரவிட்டார்
2. புயலடித்தது
3. சென்றிருப்பார்கள்

@KTBS
NOT TO BE REPUBLISHED

**ஏ. வாழ்க்கைத் திறன் :**

நீ வெளியூருக்குச் செல்ல தொடர்வண்டி நிலையத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறாய், வழியில் ஒருவர் அடிபட்டுக்கிடக்கிறார், அவருக்கு உதவி செய்து விட்டு பின் தொடர்வண்டி நிலையத்திற்கு செல்கிறாய். வண்டி ஏற்கனவே போய்விட்டது. இப்போது இச்சூழலை நீ எவ்வாறு எடுத்துக் கொள்வாய் ?

**ஐ. திறன்வளர் தொடர்பணி :**

எல்லாம் நன்மைக்கே என்ற கதையை நாடகமாக்கி நடித்துக் காட்டுக .

இது போன்ற வேறுபல சிறுகதைகளை வீட்டுப் பெரியவர்களிடம் கேட்டு அறிந்துகொள்க .

❊ ❊ ❊

@KTBS
NOT TO BE REPUBLISHED

@KTBS
NOT TO BE REPUBLISHED